21ST FEBRUARY 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 100 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com

## பிற சமூகத்தினருக்கு இடையூறின்றி நோன்பு காலத்தில் நடந்து கொள்வோம்

### அ.இ.ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள்!

அல்லாஹ்வின் அருளையும் மன்னிப்பையும் வழங்கும் புனித ரமழான் மாதத்தில்

02ம் பக்கம்பார்க்க...

# டிரம்பின் மிரட்டல்களுக்கு நாம் அடிபணிய மாட்டோம்

### ஈரான் வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

அணுசக்தி திட்டங்களை நிறுத்துமாறு 10 நாள் அவகாசம் வழங்கியுள்ளமை குறித்து ஈரான் காரசாரமான பதிலை டிரம்புக்கு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்ஸி கருத்துத் தெரிவிக்கையில் டிரம்பின் மிரட்டல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை.அமெரிக்கா எம்மீது தாக்குதல் தொடுத்தால் அயல் நாடுகளிலுள்ள படைத்தளங்களைத் தாக்குவோம்.

வரலாறு காணாத அழிவுகளை அமெரிக்கா எதிர் கொள்ளுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி திட்டத்திற்கு ”ராணுவ ரீதியிலான தீர்வு எதுவும் இல்லை” என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஷி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தாக்குதல்கள் மூலம் அணுசக்தி நிலையங்களைச் சேதப்படுத்த முடியுமே தவிர, ஈரானிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள தொழில்நுட்பத்தையோ அல்லது அறிவையோ அழிக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

செய்தியாளர்களிடம் பேசிய அராக்ஷி, ஈரானின் அணுசக்தி சாதனைகள் ”உண்மையான மற்றும் நிலையான வெற்றிகள்” என்றும், அவற்றை குண்டுவீச்சுகளால் தகர்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

கடந்த கால மோதல்களின் போது, குறிப்பாக ஜூன் 2025இல் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடனான 12 நாள் மோதலில் ஈரானின் அணுசக்தி தளங்கள் கணிசமான சேதத்தைச் சந்தித்ததை அராக்ஷி ஒப்புக்கொண்டார். இருப்பினும், அவை மிக வேகமாக

03ம் பக்கம்பார்க்க...

## இரண்டு வாரகாலம் அவகாசம் கோரும் மைத்திரி



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்ரமசிங்க உடல்நல குறைப்பாட்டின் காரணமாக நேற்று முன்னிலையாக முடியாது என தெரிவித்துள்ளதாகவும், இரண்டு வார

02ம் பக்கம்பார்க்க...

## பாதாள உலகத்தினரோடு தொடர்புடைய அரசியல்வாதிகள் குறித்து விரைவில் அறிக்கை

### அமைச்சர் ஆனந்த விஜயபால



பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலின் தலைவரான ”கெஹெல்பத்தர பத்மே”உள்ளிட்ட பல பாதாள உலக நபர்களுடன் தொடர்பு

03ம் பக்கம்பார்க்க...

## பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்பின் அடுத்த எல்லை Ai உட்கட்டமைப்பாகும்

### புதுடில்லி மாநாட்டில் ஜனாதிபதி உரை!



பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்பின் அடுத்த எல்லை “AI உட்கட்டமைப்பு“ ஆகும் - புதுடெல்லியில் நடைபெறும் “AI Impact 2026“

03ம் பக்கம்பார்க்க...

## எம்.பீ.க்களின் ஓய்வூதியம் இரத்து!

### வெளியாகியது வர்த்தமானி அறிவிப்பு!

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குதல் சட்டம்

02ம் பக்கம்பார்க்க...

## மாகாண சபைத் தேர்தல் முறையை ஆராய விஜித ஹேரத் தலைமையில் குழு



மாகாண சபைத் தேர்தல்களுக்குப் பயன்படுத்தப்படும் தேர்தல் முறைமை குறித்து ஆராய்ந்து, அதற்கு தேவையான

03ம் பக்கம்பார்க்க...

## பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துக்கள் ஜனாதிபதி பிரதமர் மன்னிப்புக் கோர வேண்டும்

### மகா சங்க மாநாட்டில் கோரிக்கை

பௌத்த மதத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர்

02ம் பக்கம்பார்க்க...

## மக்கள் வரிசைகளில் அவதிப்படும் போது ஆட்சி பிடிக்கும் நோக்கமில்லை

### சபையில் மரிக்கார் எம்.பீ.ஆவேசம்

மக்களை நெருக்கடிக் குள்ளாக்கி

02ம் பக்கம்பார்க்க...



## ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் நியூயோர்க் டைம் சதுக்கத்தில் தராவீஹ் தொழுகை



அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள

02ம் பக்கம்பார்க்க...



## சவூதி அரேபியாவுடன் சிவில் அணுசக்தி ஒப்பந்தம்

### காங்கிரஸ்‘க்கு டிரம்ப் அறிக்கை!

சவுதி அரேபியாவுடன் சிவில் அணுசக்தி ஒப்பந்தத்தை

02ம் பக்கம்பார்க்க...



## மக்கள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆட்சியைப் பிடிக்கும் ஆசை தமக்கில்லை என இன்று (20) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நாம் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் நாட்டைச் சீரழித்து, மின்சார விலையை அதிகரித்து , எரிவாயு வரிசைகளை உருவாக்கி, மக்கள் வரிசைகளில் நின்று அவதிப்படும்போது ஆட்சியைப் பிடிக்கும் துரதிர்ஷ்டவசமான ஆசை எங்களுக்கு இல்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

ஏனென்றால், ஒன்றை புரிந்து கொள்ளுங்கள், நாம் மொட்டுக்கட்சியை சேர்ந்தவர்கள் அல்ல. இது ஐக்கிய மக்கள் சக்தி (SJB). எங்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை, எங்களுக்கு எதிராக வழக்குகள் இல்லை, நாம் திருடவும் இல்லை. உங்களைப் போல பிறர் கீழே போட்டதைத் திருடி உண்டதும் இல்லை, பிச்சை எடுத்ததும் இல்லை. அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார்.

## எம்.பி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் 09 ஆம் பிரிவு அல்லது 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின்படி ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமையுள்ள மற்றும் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் எந்தவொரு நபருக்கும், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்கும் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றதுடன், அது பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, குறித்த சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்திய நிலையில், தற்போது அது சட்டமாக வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

## இரண்டு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காலங்கள் கால அவகாசம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக மைத்திரி விக்ரமசிங்கவை, இன்று (20) குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இங்கிலாந்தின் வுல்ப்ஹாம்டன் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற போது அரச பணம் விரயமாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## பிற...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உள்ளோம். நாம் அனைவரும் அதிகமாக நல்ல செயல்கள் செய்து, அல்லாஹ்வின் பொருத்தத்தையும் நெருக்கத்தையும் அடைய முயற்சித்து வரும் இச்சமயம், எமது செயற்பாடுகளாலும் நடவடிக்கைகளாலும் பிறருக்கு எந்தவித இடையூறும் தொந்தரவுகளும் ஏற்படாமல் கவனித்துக் கொள்வது நம் மீது கடமையாகும்.

இஸ்லாம், அண்டை வீட்டார்களுக்கு தங்களால் எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறது. 'தனது தீங்குகளிலிருந்து அண்டை வீட்டார் பாதுகாப்பாக இருக்கவில்லை என்றால், அவர் உண்மையான ஒரு முஃமினாக இருக்க முடியாது' என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவுரையும் இதைத் தெளிவாக உணர்த்துகிறது.

தராவீஹ் தொழுகை, இப்தார் நிகழ்ச்சிகள், பயான் நிகழ்ச்சிகள் போன்றவை ரமழான் மாதத்தில் நடைபெறுகின்ற மிக முக்கிய நிகழ்வுகளாகும். இதன் மூலம் எமது சமூகம் பல்வேறு பயன்களைப் பெறுவது யாராலும் மறுக்க முடியாது.

ஆயினும், இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் போது ஒலிபெருக்கியின் சத்தம் அளவுக்கு அதிகமாக உயர் நிலையில் வைப்பதனால் சுற்றுப்புறத்திலுள்ள சிறுவர்கள், நோயாளிகள், வயோதிபர்கள் போன்றோருக்கு பெரும் தொந்தரவாக மாறுகிறது.

அதேபோல்,

வீடுகள் மற்றும் கடைகளில் வானொலி சத்தங்களை அதிகரித்து வைத்தல்

வாகனங்களை ஒழுங்கின்றி நிறுத்துதல்,

பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும்வகையில் வாகனங்களை நிறுத்தி வைத்தல்,

காரியாலயங்கள் மற்றும் வியாபார தலங்களிலிருந்து இறுதி நேரத்தில் வெளியேறி, இஃப்தாருக்கு வீடு செல்லும் நோக்கில் அதிகவேகமாக வாகனங்களை செலுத்துதல்

போன்ற செயல்களால் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுண்டு.

தொழுகை போன்ற வணக்கங்கள் மற்றும் இதர செயற்பாடுகளின் போது பிறருக்கு இடையூறின்றி நடந்து கொள்வதை பின்வரும் அல்குர்அன் வசனம் மற்றும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

"இன்னும், உம்முடைய தொழுகையில் அதிக சப்தமிட்டு ஓதாதீர் மிக மெதுவாகவும் ஓதாதீர் மேலும், இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு மத்தியமான வழியைக் கடைப்பிடிப்பீராக!" (17:110)

'(நாங்கள் நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்றோம். அவர் வீட்டில் உள்ள மூன்று வெள்ளாடுகளிலிருந்து பால் கறந்து பகிர்ந்து கொள்ளச் சொன்னார்கள்.) அவ்வாறே நாங்கள் பால் கறந்து எங்களில் ஒவ்வொருவரும் தமக்குரிய பங்கைப் பருகினோம். நபி (ஸல்) அவர்களுக்குரிய பங்கை அவர்களுக்காக எடுத்துவைத்தோம். நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் (எங்களிடம்) வந்து, உறங்கிக்கொண்டிருப்பவரை விழிக்கச் செய்யாமல், விழித்திருப்பவர்களுக்குக் கேட்கும் விதமாக (மெதுவாக) முகமன் (ஸலாம்) சொல்வார்கள் என மிக்தாத் பின் அல்அஸ்வத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.' (ஸஹீஹ் முஸ்லிம்: 4177)

எமது நாட்டில் ஒவ்வொரு சமூகத்தினரும் தமது மார்க்க வழிகாட்டுதலின்படி வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கான முழு சுதந்திரம் பெற்றுள்ளனர். எனினும், அந்த சுதந்திரம் தமது சமூகத்தினருக்கோ பிற சமூகத்தினருக்கோ இடையூறாக அமையக்கூடாது. அதே சமயம், நாட்டின் சட்டங்களுக்கு முரணாகவும் இருக்கக் கூடாது.

எனவே, ஒலிபெருக்கியின் சத்தத்தை தேவைக்கு அதிகமாக அதிகரிப்பதை தவிர்ப்பதுடன் ஒவ்வொரு மஸ்ஜிதும் தமது பிரதேசத்தின் நிலைமைகளை கருத்தில் கொண்டு பிறருக்கு இடையூறு ஏற்படாமல் செயல்பட வேண்டும் என அனைத்து மஸ்ஜித் நிர்வாகிகளையும் இமாம்களையும் பொதுமக்களையும் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா அன்புடன் வேண்டிக்கொள்கிறது.

முஃப்தி எம்.ஐ.எம் ரிஸ்வி
தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

## சவூதி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மேற்கொள்வது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காங்கிரஸிற்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.

அணு ஆயுத பரவலைத் தடுக்க அமெரிக்கா வழக்கமாக விதிக்கும் மிகக்கடுமையான பாதுகாப்பு நிபந்தனைகள் இன்றி இந்த ஒப்பந்தம் அமைய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

"ஈரான் அணு ஆயுதத்தைப் பெற்றால் நாங்களும் பெறுவோம்" என சவுதி இளவரசர் ஏற்கனவே கூறியுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் மத்திய கிழக்கில் புதிய ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்கும் என ஜனநாயகக் கட்சியினர் எச்சரிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தம் பெப்ரவரி 22-ஆம் திகதி காங்கிரஸ ில் சமர்ப்பிக்கப்படலாம் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆயிரக்கணக்கான...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உலகப்புகழ் பெற்ற டைம்ஸ் சதுக்கத்தில் ரமலான் மாதத்தின் சிறப்புத் தொழுகையான தராவீஹ் 2026-ஆம் ஆண்டும் நடைபெறுகிறது.

குர்ஆன் வசனங்கள் மற்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு பெரிய திரைகளில் ஒளிபரப்பப்படும். இது ஒரு வருடாந்திர நிகழ்வாகத் தொடர்ந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## பௌத்த...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மன்னிப்பு கோர வேண்டும் என கொட்டபிட்டிய ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பௌத்த மகா சங்க சம்மேளனத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இனங்களுக்கு இடையிலும் மதங்களுக்கிடையிலும் பிரச்சினை இல்லை சிலர் பகிரங்கமாக இனவாத மற்றும் மதவாத கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அந்த பட்டியலில் ஜனாதிபதியும் பிரதமரும் முன்னிலை வகிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை என்பது வரலாற்று சிறப்புமிக்க இடமாகும்.

வழிபாடுகளில் ஈடுபடுவதற்காகவே பௌத்த தேரர்கள் அங்கு செல்கின்றனர்.

எனினும், பௌத்த வைராக்கியத்தை பரப்புவதற்காகவே தேரர்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்வதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே அல்லது வீழ்த்துவதற்காகவோ நாங்கள் ஒன்றுக் கூடுவதில்லை.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் ஜனாதிபதியும் பிரதமரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அதற்காக ஜனாதிபதியும், பிரதமரும் மன்னிப்பு கோர வேண்டும்.

அரசாங்கம் உரிய பாதையில் பயணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கிலேயே நாங்கள் ஒன்றுக்கூடியுள்ளோம்.

அதேநேரம், பாலியல் தொடர்பான கல்வி நாட்டிற்கு அவசியமற்றது.

பாலியல் தொடர்பான கல்வியை அறிமுகப்படுத்த அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பாலியல் தொடர்பான போதிய தெளிவினை அனைவரும் கொண்டுள்ளார்கள்.

எனவே அந்த கல்வி தேவையற்றது என கொட்டபிட்டிய ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.




## டிரம்பின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மறுசீரமைக்கப்பட்டது, ”விஞ்ஞானிகள் இப்போதும் உள்ளனர், தொழில்நுட்பம் நிலைத்து நிற்கிறது” என்பதையே காட்டுவதாக அவர் கூறினார்.

ஈரானை அடிபணிய வைக்க ராணுவ பலத்தைப் பயன்படுத்துவது பலன் தராது என்று அவர் எச்சரித்தார். போரினால் சாதிக்க முடியாததை, பேச்சுவார்த்தை மேசையிலும் சாதிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் ஏதேனும் விரோத நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், அதற்கு ”வலிமையான மற்றும் நசுக்கக்கூடிய பதிலடி” கொடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ராஜதந்திரமே ”ஒரே தீர்வு” என்று வலியுறுத்திய அராக்ஷி அது ராணுவ மிரட்டல்களின் அடிப்படையில் இல்லாமல், பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## பாதாள...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வைத்திருந்த அரசியல்வாதிகள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (20) உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

30 தொலைபேசி அழைப்புகளில் நடத்தப்பட்ட விசாரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் பத்மே உட்பட பல நபர்களின் 30 தொலைபேசி அழைப்புகளில் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த உண்மைகள் வெளிவந்ததாக அவர் கூறியுள்ளார்.

அதன்படி, அரசியல்வாதிகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும், வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும், முழுமையான விசாரணைக்கு பிறகு தெளிவான அறிக்கை வெளியிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

”கெஹல்பத்தர பத்மே உட்பட பல பாதாள உலக நபர்களை பொலிஸார் கைது செய்த பின்னர் விசாரணைகள் தொடர்கின்றன. அவர்களிடம் இருந்த 30 தொலைபேசிகள் குறித்து தற்போது விசாரணைகள் நடந்து வருகின்றன.

வாக்குமூலங்கள் பதிவு

அந்த தொலைபேசிகள் மற்றும் அவர்களின் வாக்குமூலங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள், அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன.

அந்த அரசியல்வாதிகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டு, வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

முழுமையான விசாரணைக்குப் பிறகு இது குறித்து தெளிவான அறிக்கை வெளியிடப்படும். விசாரணைகள் தற்போது மிகவும் சிறப்பாக முன்னேறி வருகின்றன.” என்றும் தெரிவித்துள்ளார்.

## மாகாண...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க விசேட நாடாளுமன்றக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் செயல்படும் என்று சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன இன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தற்போதுள்ள சட்ட மற்றும் நடைமுறைத் தடைகளை நீக்கி மிகவும் பொருத்தமான தேர்தல் முறையை அடையாளம் காண்பதே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாகும்.

இந்த சிறப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், சுனில் வட்டகல, இராசமாணிக்கம் சாணக்கியன், லக்ஸ்மன் நிபுனாராச்சி, சமன்மலீ குணசிங்க, முனீர் முலாஃபர், அருண் ஹேமச்சந்திர, தர்மப்பிரிய விஜேசிங்க, சந்தன சூரியாராச்சி, நிசாம் காரியப்பர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.




## பொருளாதார...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாநாட்டின் தலைவர்கள் அமர்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தினார்

எவரையும் கைவிடாத வகையில் மற்றும் நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த பொதுவான விழுமியங்களைப் பகிர்ந்து கொண்டு பரஸ்பரம் கற்றுக்கொள்வதற்கும் கூட்டு முயற்சியுடன் முன்னோக்கிச் செல்வதற்கும் இலங்கை தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

புதுடெல்லியில் நடைபெற்று வரும் AI Impact 2026 மாநாட்டின் தலைவர்கள் அமர்வில் (19) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு குறித்த இலங்கையின் நோக்கம் என்பது தனித்து வெற்றியைப் பெறுவது அல்ல எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தனது நாடு யுஐ உட்கட்டமைப்பை பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்பின் அடுத்த எல்லையாகப் பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். எனவே, பின்வரும் 04 அடிப்படை விடயங்களை மையமாகக் கொண்ட பிராந்திய ஒத்துழைப்பை இலங்கை முன்மொழிவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவை மனிதகுலத்தின் நலனுக்காகப் பொறுப்புடன் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு “AI Impact 2026“ மாநாடு புதுடெல்லியில் நடைபெறுகிறது. இதன் அரச தலைவர்கள் அமர்வின் ஆரம்ப நிகழ்வு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று காலை நடைபெற்றது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் (Emmanuel Macron), அபுதாபி முடிக்குரிய இளவரசர் ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் (Sheikh Khaled bin Mohamed bin Zayed Al Nahyan), பிரேசில் ஜனாதிபதி லூலா டி சில்வா (Lula de Silva) மற்றும் பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே (Tshering Tobgay) உள்ளிட்ட அரச தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டுடன் இணைந்ததாக புதுடில்லி பாரத் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியையும் அரச தலைவர்கள் பார்வையிட்டனர். அத்துடன், மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து அரச தலைவர்களும் பிரதிநிதிகளும் குழுவாக புகைப்படம் எடுக்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டனர்.

யுஐ ஐஅியஉவ 2026 மாநாட்டின் தலைவர்கள் அமர்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆற்றிய முழுமையான உரை வருமாறு:

செயற்கை நுண்ணறிவானது பொருளாதாரங்கள், அரச நிர்வாகக் கட்டமைப்புகள் மற்றும் சமூகங்களை மாற்றியமைத்துக் கொண்டிருக்கும் இந்தச் சிறப்பான தருணத்தில், புதுடில்லியில் உங்களுடன் இணைந்துகொள்வதை நான் கௌரவமாகக் கருதுகிறேன். கடந்த நூற்றாண்டுகளில் தொழில்மயமாக்கல் ஏற்படுத்தியதைப் போலவே, தேசிய வளர்ச்சிப் பாதையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு மாற்றத்தக்க சக்தியாக யுஐ தொழில்நுட்பம் விளங்குகின்றது.

எவ்வாறாயினும், AI தொழில்நுட்பத்தில் வலுவடைந்துள்ள நாடுகளுக்கும் அத்தகைய வசதியற்ற நாடுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் இடைவெளியானது, பல நாடுகளின் டிஜிட்டல் பொருளாதாரத்தில் பாரிய ஆபத்தை உருவாக்குகிறது. இவ்வாறு பின்தள்ளப்படும் நாடுகள் உலகளாவிய வளர்ச்சி மற்றும் நவீன பொருளாதார வாய்ப்புகளிலிருந்து மேலும் பல்வேறு பக்கவிளைவுகளுக்கு உள்ளாக நேரிடும்.

இதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் அனைவரையும் உள்ளடக்கிய, நீதியான மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

பல வளர்ந்து வரும் பொருளாதாரங்களைப் போலவே இலங்கையும் AI தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இன்னும் பூர்த்தி செய்யவில்லை. எனவே, சரியான நோக்கம் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் நம்பிக்கையுடனும் தயக்கமின்றியும் செயற்பட வேண்டிய தீர்மானமிக்க தருணம் வந்துள்ளது.

தொழில்நுட்ப அறிவு கொண்ட இளம் மனித வளம் இலங்கையில் உள்ளது. மேலும், வலுவான சட்டக் கட்டமைப்பு மற்றும் சர்வதேச கூட்டாண்மைகளுடன் இணைக்கப்பட்ட பொருளாதார கலாசாரமும் எம்மிடம் உள்ளன. நாம் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பிற்கான சட்டக் கட்டமைப்புகளை நவீனமயப்படுத்தி, டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு தொடர்ந்து முதலீடு செய்வதுடன், புத்தாக்கங்களை ஊக்குவிக்கக்கூடிய பொதுமக்களின் நம்பிக்கையை பாதுகாக்கக்கூடிய நிறுவனங்களை வலுப்படுத்துகிறோம். - என்றார்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 FEBRUARY 21 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வாக்காளர் பதிவில் அக்கறை காட்டுவோம்..!

2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெறுநர் இடாப்புக்கான மீளாய்வு செயற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு தற்போது ஆரம்பித்துள்ளது. இம்முறை கிராம அலுவலகர்கள் வீடுகளுக்கு வருவதில்லை எனவும் 2025 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பில் நீக்கப்படுபவர்களை மற்றும் 2026 ஆம் ஆண்டு தேர்தலில் டாப்புக்கு உட்சேர்க்கப்பட தகைமை பெற்றவர்களை உட்சேர்க்கும் வகையில் இந்த ஆண்டுக்கான தேருனர் இடாப்பு மேல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி 2025 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பில் பதிவு செய்தவர்கள் அதே முகவரியுடன் இம்முறையும் பதிவு செய்யப்பட உள்ளனர். புதிதாக விண்ணப்ப படிவம் எதுவும் நிரப்பப்படுவதில்லை. 2026 ஆம் ஆண்டுடன் 18 வயதை அடைந்தவர்கள், மற்றும் முகவரி மாற்றம் பெற்றவர்கள் தமது விபரங்களை கிராம அலுவலர்களிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முன்பு போன்று இம்முறை கிராம அலுவலர்கள் தமது வீடுகளுக்கு வருகை தருவதில்லை என்பதனால் வாக்காளர் பதிவு விடயத்தில் அக்கறை காட்டாமல் இருப்பவர்களுக்கு, ஒரு பிரஜையின் ஜனநாயக உரிமையாக இருக்கும், வாக்களிக்கும் வாய்ப்பு இம்முறை கிடைக்காமல் போகலாம்.

அதுமட்டுமின்றி வாக்காளரிடம் தமது பெயர் பதிவு செய்யப்பட்டு இருக்கும் ஒரு பிரஜைக்கு தமது பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்த்தல் மற்றும் தமது இருப்பினை உறுதிப்படுத்தல் போன்ற பல விடயங்களுக்கு வாக்குப்பதிவு மிக முக்கியமானதாகும்.

எனவே வாக்காளர் பதிவு விடயத்தில் எவரும் அசிரத்தையாக இருந்து விட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

வாக்குப்பதிவின் முக்கியத்துவத்தை சமூகத்துக்கு உணர்த்துவது மிக முக்கியமானது. சமூக அமைப்புகள் மதம் சார் அமைப்புகளுக்கூடாக மக்களை அறிவு ஏற்றுவது மிக முக்கியமானது. பள்ளிவாசல்களில் இது தொடர்பாக அறிவித்தல்களை மேற்கொள்வது அவசியமாகிறது. அனேகமான இடங்களில் முஸ்லிம்கள் வாக்குகளை பதிவு செய்வதற்கு அக்கறை காட்டாத நிலைமைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகிறது.

இலங்கை அரசியலமைப்பில் நிறுவப்பட்டுள்ள சர்வசன வாக்குரிமை பற்றி முஸ்லிம் மக்களுக்கு விழிப்புணர்வு அளிப்பதைப் பற்றி தேர்தல் ஆணைக்குழு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

டிஜிட்டல் பங்கெடுப்பினூடாக ஜனநாயகத்தை பலப்படுத்துவோம் என்பதே இவ்வாண்டின் வாக்காளர் தினத்தின் தொனிப்பொருளாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் வாக்காளர் பதிவு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வசதிகளை இணைய வழி ஊடாக பெறும் வாய்ப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகளை பயன்படுத்தி 18 வயதுக்கு மேற்பட்ட அத்தனை பிரச்சினைகளையும் பதிவு செய்வதற்கு பொதுமக்கள் அக்கறை காட்ட வேண்டும். கடந்த ஆண்டுகளில் இதில் அக்கறை செலுத்தாது இருந்தவர்கள் தமது பெயர்களை இவ்வாண்டு வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கி, தாம் வாக்காளர்களாக மாறுவதற்கு முயற்சிக்க வேண்டும். இந்த விடயத்தில் அக்கறை உள்ளவர்களாக ஒவ்வொரு பிரஜையும் இருக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

SAFEWAY TRAVELS & TOURS
Organizing Ha!,
Umrah Pilgrimage & Airline Ticketing M F SAFEWAY IMPEX (Po) LTD.
Exporters of Tea




191/20-1,
Siebel Garden,
High Level Road.
Kirulapana,
Colombo-05,
Sri Lanka.

E-mail:
safewayfarook1@gmail.com

Web:
sfewaytravelsandtours.com

Hotline:
+94 11 2513227
+94 11 2513226
+94 11 2513373

Insta :
Umarahwithsafeway
FB:
Safeway Travels & Tours





# உதயம் 100 வது இதழ், வாசகர் கருத்துக்கள்



## உதயம் 100 வது இதழுக்கு எஸ் எச் எம் நியாஸ் வாழ்த்து...



உதயம் பத்திரிகையின் 100வது பதிப்பினை வெளியிடும் இத்தருணத்தில் அதனுடைய சடுதியான வளர்ச்சி பிரமிக்கும் அளவிலான மகிழ்ச்சியாக உள்ளது.
இத்தகைய வெளியீடு அதனுடைய வாசகர்களுக்கான ஆழமான செய்திப் பத்திரிகை ஒன்றின் அவசியம் உணரப்பட்டதாக வாசகர் நெஞ்சங்களில் தனக்கென ஒரு இடம்பிடித்திருப்பதை உணர முடிகிறது.
எனவே இன்ஷா அல்லாஹ் உதயம் தனது வெற்றிப்பயணத்தில் இமயம் தொடும் என்ற நம்பிக்கையுடன் அதன் பிரதம ஆசிரியர் உட்பட நிர்வாககத்திற்கும் வாசகர் நெஞ்சங்களுக்கும் பெருமிதத்துடன உளமார வாழ்த்துகிறேன்

**எஸ் எச் எம் நியாஸ்**
**வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்,**
**அனைத்து நிறுவனங்களுக்கான பணிப்பாளர்**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

## உதயம் வரும் வாரத்துடன் 100 வது மின் இதழாக வருவது குறித்து மகிழ்ச்சி!



பல்வேறு தகவல்களை உள்ளடக்கியதாக வெளி வரும் உதயம் பலரும் வாசிக்க முடிகிறது எனவே சமூகத்தின் நலன்கருதி இப்பத்திரிகை மின் இதழாகவாவது வெளிவருவது பாராட்டத்தக்கது இன்றைய நிலைமையில் இதனை வெளியிட பணிபுரியும் பிரதம ஆசிரியர் செய்தி ஆசிரியர் உட்பட சகரும் பாராட்டப்படவேண்டியவர்கள முன்பு வெளிவந்த நவமணி பத்திரிகையின் “திரைக்குப் பின்னால்” பகுதியை பலரும் ஆவலுடன் வாசிப்பார்கள் அப்பகுதியை உதயத்திலும் ஆரம்பிக்கலாமே

**எம்.ஆர்.எம்.ராபி**
**உதவி தவிசாளர்**
**உக்குவளை பிரதேச சபை**

## 100 து உதயம் பத்திரிகை வரவு குறித்து மகிழ்ச்சி வாழ்த்துக்கள்

அச்சில் முன்பு நவமணியை வாசித்தோம் இன்று முஸ்லிம் சமூகத்துக்கென மின் இதழாக வெளிவரும் உதயம் பத்திரிகையில் வெளிவரும் தகவல்கள் பயனுள்ளதாக உள்ளன

**(அல்ஹாஜ் எம்.ஐ.அத்ஹம்**
**மாத்தளை மாநகரசபை முன்னாள் உதவ-**
**ித் தலைவர்)**


## இதே தரத்துடன் செயல்பட வாழ்த்துக்கள்

உதயம் பத்திரிகையானது சமூக, அரசியல், பொருளாதார, கல்வி,கலாசார, விளையாட்டு என பல்துறைகளிலும் நடுநிலையாக செய்திகளை தாங்கி வருகிறது. உதயம் பத்திரிகை மேலும் மேலும் தன் பணியினைத் தொடர வேண்டும். எதிர்காலத்திலும் இதே தரத்துடன் தொடர்ந்து செயல்பட வாழ்த்துக்கள்.

**ஆசிரியர் எம்.ஆர்.எம்.ரனீஸ்**



## உதயத்தின் 100 வது இதழுக்கு ஏ.கே ஆப்தீன் அலாவுதீன் வாழ்த்து.



உதயம் மின்னிதழ் தனது 100 வது இதழை வெளியிடுவது கண்டு மகிழ்ச்சி அடைவதுடன் எனது உளமார வாழ்த்துக்களையும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.
எமக்கான ஒரு அச்சு செய்திப் பத்திரிகை இல்லாத தருணத்தில் எமது குறைகளையும் தேவைகளையும் உலக அறியச் செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டு வாசகர் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்த இன்று தனது 100 வது இதழை எட்டியுள்ளது இமாலைய வெற்றியே அல்ஹம்துலில்லாஹ்.
இன்ஷா அல்லாஹ் இந்த வெற்றி பயணம் பல்லாண்டு காலம் தொடர வேண்டும் தொடரும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**ஏ.கே.ஆப்தீன் அலாவுதீன்**
**முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர்,**
**தற்போதைய உறுப்பினர்**

## சமூகத்தின் உரிமைக் குரல்

உதயத்தின் 100 ஆவது இதழை முன்னிட்டு எனது கருத்தை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்உண்மையில் உதயம் என்பது இலங்கையில் சமூகத்துக்கான குரல் கொடுத்து வந்த நவமணியின் அஸ்தமனத்தை தொடர்ந்து உதயம் பெற்ற சமூகத்துக்கான குரலாகவும் சமூகத்தின் செய்திகளை உலகுக்கு கொண்டு வரும் காத்திரமான பணிகளை செய்து வருகின்றது என்றால் மிகையாகாது.
நடுநிலைமையோடும் நேர்த்தியாகவும் சமூக ஊடகங்களுடன் போட்டியிடக்கூடிய வகையிலும் இதில் பிரசுமாகும் செய்திகளும் தகவல்களும் காணப்படுவதுடன் நிகழ்வுகளின் செய்திகளை வெறுமனே எழுத்து வடிவுக்குள் மாத்திரம் வரையறுக்காமல் போதுமான புகைப்படங்களுடன் செய்திகளை பகிர்வதனால் மக்கள் வாசிக்கும் அளவுக்கு கவர்ச்சிகரமாக அமைந்திருப்பதும் சிறப்பம்சமாகும்.
இதன் குறைபாடுகளாக அறிவியல் பக்கம் புதிய கண்டு பிடிப்புகள், துணுக்குகள், சிறுவர் ஆக்கங்கள், துரித வேலை வாய்ப்புக்கள் போன்றவை உள்வாங்கப்பட்டால் இன்னும் உதயம் மூலம் மக்கள் அதிக வெளிச்சம் பெறும் பயனடைந்து கொள்ளும் இதன் பணி இன்னும் சிறக்கவும் இதன் ஆசிரியர் இதை இன்னும் சிறப்பாக முன்னெடுத்து சென்று இதை விளம்பரங்களை பெற்று அச்சு வடிவில் விரைவில் கொண்டு வந்து ஒவ்வொரு வீட்டு வாசலையும் தட்டிச்சென்று மக்களை போய் சேரவும் வாழ்த்துகின்றேன்.

**எம். ஆர். லுதுபுள்ளாஹ்**
**கஹட்டோவிட்ட**

## உதயம் உள்ளங்களை கொள்ளைக் கொண்டு மணம் பரப்ப வாழ்த்துக்கள்

பல்சுவை அம்சங்களோடு பவனி வந்த “உதயம் “ நூற்றாண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அரசியல் தொடக்கம் ஆன்மீகம் வரை, உலக செய்தி முதல் விளையாட்டு செய்திவரை அலங்கரிக்கும் உதயத்தில் மனோதத்துவ ஆலோசனைகள் உள்ளத்தை தொட்டுச் செல்கிறது. இதில் மங்கையொளியை மேலும் மெருஊட்டலாம். இலக்கியதுக்கு என ஒர் இடமொதுக்கினால் இலக்கிய ஆர்வாளருக்கு களம் அமைத்து கொடுக்கலாம். உதயம் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டு மணம் பரப்ப வாழ்த்துக்கள்.

**பாரா தாஹிர்**
**மாவனல்லை**

## உதயம் பற்றி என் இதய வரிகள்

உள்ளதை உள்ளவாறு சொல்வதில் உதயம் முன் நிற்பது வரவேற்கத்தக்கது. அரசியல் தகவல்களையும் ஆய்வு கட்டுரைகளையும் நாட்டின் நடப்புகளையும் நடைபெற்ற நிகழ்வுகளையும் வெளிநாட்டு வெளிவிவகார நடப்புகளையும் , போட்டிகள் , விருது வழங்கல் , விழாக்கள் பற்றிய கருத்துக்கள் மற்றும் விவரங்கள் உளவள ஆலோசனைகள் , வாசிப்பின் நேசிப்பு , நூல் அறிமுகம் , பெண்களுக்கான விழிப்புணர்வு , விளையாட்டு மற்றும் சாதனைகள் அனைத்தையும் அம்சமாய் தாங்கி வரும் உதயம் இக்காலத்தின் தேவைக்கேற்ற பத்திரிகை என்பது மறுக்க முடியாத உண்மை.
அரசியல் நடப்புகளை ஆங்காங்கே நடக்கும் நிகழ்வுகளை தெளிவுபடுத்தும் திறமை உதயத்திற்கு உண்டு. நாட்டின் எப்பாகத்தில் என்ன நிகழ்வுகள் நடைபெறினும் அவற்றை அனைவருக்கும் தெரியப்படுத்த புகைப்படங்களுடன் பிரசுரிப்பது மிகவும் சிறப்பானது.
நூல் மற்றும் நூலாசிரியர்கள் பற்றி தகவல்களை தருவதன் மூலம் நிறைய தேடலை பெற்றுக் கொள்ள முடிகிறது. விருது வழங்கல் , பரிசளிப்பு , விழாக்கள் , சாதனை போன்ற பாராட்டுத்தக்க செய்திகளையும் உதயம் எல்லோர் முன்னிலைக்கும் கொண்டு வருவதானது அவர்களை கௌரவப்படுத்துவதாகவே அமையும்.
‘வாசிப்பீராக’ என்ற ஒற்றை சொல்லை மூல மந்திரமாகக் கொண்ட வாசிப்பின் சமூகத்தை வாசிக்க வைக்க வாசகர் வட்டத்தை ஊக்குவிக்கும் பக்கம் இன்னும் சிறப்பு.
மங்கையரை மறந்திடாது மங்கையொளி தாங்கி வரும் தகவல்களும் விழிப்புணர்வு ஆலோசனைகளும் அமைந்து பெண்களுக்கே உரிய பக்கமாக குறிப்பிட்டு ஒதுக்கிருப்பது நிரம்ப சந்தோஷம்.
விளையாட்டையும் வீர வீராங்கனை பற்றி தகவல்கள் போட்டி நிகழ்வுகள் என்பன ஒரு பத்திரிகைக்கான மற்றும் ஒரு சிறப்பான பகுதியே.
உள்ளத்துக்குத் தேவையான அத்துணை அம்சங்களையும் அத்துப்படியாய் அமைத்துத்தருவதில் உதயம் எம் இதயங்களிற்கு அருகாமையில் உள்ளது.
ஒரு பத்திரிகை கொண்டிருக்க வேண்டிய முக்கியமான விடயங்களை அழகாய் , தெளிவாய் தருவதில் உதயத்திற்கு நிகர் உதயமே.
ஒரு மின்னூலாக இருந்தாலும் சிறப்பானதொரு சேவையை உதயம் வாசகர்களுக்கு வழங்கி வருவது.., பாராட்டத்தக்கது.
நூறாவது இதழ் காணும் உதயம்., இது போன்று பல படிகள் முன்னேறி நிறைய அகவைகள காண வாழ்த்துக்கள்...

**பயாஸா பாஸில்**
**எழுத்தாளர்**

## மங்கையொளி இலக்கியப் பகுதிகளை மேலும் மெருகூட்டலாம் நூறாவது தடம் பதிக்கும் “உதயம்”



செய்திகள் சொல்வதில் சீறிய வேகம்.
செம்மைத் தமிழ் நடையில் தீராத் தாகம்.
சார்பு நிலை ஏதுமின்றிச் சத்தியம் காத்து – மக்கள்
சாசனம் படைத்திடும் எழுதுகோல் வீச்சு.
ஆய்வுகள், கட்டுரைகள், அறிவின் விருந்து – எம்
அகக்கண்ணைத். திறக்கின்ற அரிய மருந்து.
நூறாவது இதழை தொட்ட இக்கணம்
பல்லாயிரம் இதழ்களை தொடட்டும் உங்கள் பயணம்.
வாசகர் நெஞ்சங்களில் என்றும் நீங்காத இடம் – எம்
வாழ்வியலின் வழிகாட்டி இந்த “உதயம்”
நூறு இதழ்கள்...
வெறும் காகிதங்கள் அல்ல,
எம் மக்களின்
நம்பிக்கை ஆவணங்கள்.
தொடரட்டும் உங்கள்
சத்தியப் பயணம்

**வாழ்த்துக்களுடன்,**
**கலாபூஷணம் பரீட் இக்பால்**
**உதயம் வாசகர்**

# புதிய வக்பு சபை நியமனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது

## இம்ரான் எம் பி குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வக்பு சபை உறுப்பினர்களின் பட்டியல், தகுதியின் அடிப்படையிலான நியமனமாக அன்றி, அரசியல் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கமாக அமைந்திருப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது, கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய சமாதான முன்னணி உறுப்பினராக இருந்த ஏ.எம்.ஜே. எம். ஜவ்பர், கடந்த வாரம் தனது பதவியிலிருந்து விலகி தற்போது வக்பு சபை உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் போது, கொழும்பு மாநகர சபை மற்றும் கொட்டிகாவத்தை பிரதேச சபைகளில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக இக்கட்சி செயற்பட்டிருந்தது. அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தமைக்காக வழங்கப்பட்ட ஒரு அரசியல் இலஞ்சமாகவே இந்த நியமனத்தை பார்க்க வேண்டியுள்ளது.

வக்பு சபை என்பது அரசியல் சார்பற்ற முறையில் இயங்க வேண்டிய ஒரு பொது நிறுவனம். ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் நீண்டகால செயற்பாட்டாளராகவும், அக்கட்சியின் சார்பில் தொடர்ச்சியாக தேர்தல்களில் போட்டியிட்டவருமான எம்.ஐ.எம். பௌஸான் (சான் முஹம்மத்) போன்றவர்களை இச் சபைக்கு நியமித்திருப்பதன் மூலம், இந்தச் சபை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

முஸ்லிம் சமூகத்தின் மத மற்றும் கலாசார விழுமியங்களுடன் தொடர்புடைய ஒரு சபைக்கு, ஒரு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலை (துவான் நசீர் மஜீத்)



நியமித்திருப்பது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும். சிவில் நிர்வாக அமைப்புகளுக்குள் இராணுவ அதிகாரிகளை புகுத்தும் போக்கை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தொடர்வது, வக்பு சபையின் சுயாதீனத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, தமக்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சிகளுக்கும், தமது கட்சி உறுப்பினர்களுக்கும் பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் பழைய அரசியல் கலாசாரத்தையே பின்பற்றி வருகிறது. புனிதமான வக்பு சபையின் கௌரவத்தையும், அதன் நோக்கத்தையும் சீர்குலைக்கும் இத்தகைய அரசியல் நியமனங்களை சமூக நலன் கருதி மீளப்பரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

# பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் கண்காட்சியும் ரமழான் வரவேற்பும்

**(பேருவளை பீ.எம் முக்தார்)**

பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் கண்காட்சியும் ரமலான் பலார் நிகழ்வும் பாடசாலை நிர்வாக முகாமைத்துவ தலைவர் அஷ் ஷெய்க் அல் ஹாஜ் பௌஸர் ஹூஸைன் (நளீமி) தலைமையில் பாடசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பேருவளை பிரதேச சபைத் தலைவர் பைஸான் நைஸர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை அங்குரார்பணம் செய்து வைத்தார். பாடசாலை பணிப்பாளர் ஹாதிக் பௌஸர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.







கெக்கிராவ ஆதார வைத்தியசாலையில் நிலவும் பணியாளர் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை கண்டறிவதற்கான களவிஜம் ஒன்றை வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச மேற்கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# ஆடைத் துறைக்கு புதிய தொழில் முனைவோரை

## உருவாக்கும் நோக்கில் இளைஞர் படையணியின் புதிய பாடநெறி

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

இளைஞர் படையணியின் அனுராதபுரம் பயிற்சி மையத்தில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹென்னாயக்க தலைமையில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் படை அனுராதபுரம் பயிற்சி மையத்தின் வேண்டுகோளின் பேரில் பிரண்டினா நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஆடைத்துறையில் புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் நோக்கில் இந்த பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பாட நெறியின் முடிவில் ஆடைத் துறையில் தொழில் வாய்ப்பு வழங்கப்படும். இந்த பாட நெறிக்கு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்கிய ஸ்ரீ ஹேரத் தேசிய இளைஞர் படைப் பிரிவின் பாணிப்பாளர் காமினி விக்ரமபால தேசிய இளைஞர் படைப்பிரிவின் வடமத்திய மாகாண உதவி பணிப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## அகில இலங்கை ரீதியாக குர்ஆன் மத்ரஸாகளுக்கிடையிலான

# இஸ்லாமியப் போட்டி பரிசளிப்பு விழா






தாருல் குர்ஆன் லிபரா இமில் ஈமான் அல் குர்ஆன் மத்ரஸாவின் 25வது ஆண்டு நிறைவு நினைவாக இவ்விழா நடத்தப்பட்டது.

இதற்கான போட்டி ஜனவரி 10, 2026 அன்று அல் ஹிக்மா கல்லூரியில் நடைபெற்றது, அகில இலங்கை ரீதியாக மத்ரஸாக்களில் இருந்து கிட்டத்தட்ட 1,000 மாணவர்கள் பங்கேற்றனர்.

அப்போட்டிகள் அணைத்தும் மூன்று பிரிவுகளாக சுமார் 70 மத்தியஸ்தர்களின் மதிப்பீட்டின் கீழ் போட்டிகள் யாவும் இனிதே நிறைவுற்றது.

அதன் பரிசழிப்பு விழா பெப்ரவரி 14, 2026 அன்று கொத்தடுவயில் உள்ள யேயுஹு கலாசார நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்விழாவுக்கு பிரதம அதிதிகளாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் திணைக்கலகத்தின் உதவிப்பணிப் பாளர் சகோதரர் அஸ்ரூப் மற்றும் நாஸ் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் அஷ் ஷேக் நஜ்மான் ஸாஹித், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கொழும்பு கிளையின் தலைவர் அஷ் ஷேக் அப்துல் முக்ஸித் ஹஸரத் மற்றும் அமீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ் ஷேக் தாஸிம் (கபூரி), அஷ் ஷேக் கலாநிதி மஹ்தூம் மதனி ,பாத ஹேவாகட்ட பிரதேச சபை உறுப்பினர் மற்றும் தெல்தோட்டை மஸ்ஜித் சம்மேலனத் தலைவர் அஷ் ஷேக் முனீர் ஸாதிக் காஷிபி அவர்களும் இன்னும் பல முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வெற்றிப் பெற்ற அணைத்து வெற்றியாளர்களுக்கும் பணப்பரிசில்களும் சான்றிதல்களும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

## ஊடகவியலாளர் பாரா தாஹிரின்

# தாயார் காலமானார்

மாவனல்லை நயாவலவை சேர்ந்த ஹாஜியானி ஹைருன் பீவி அவர்கள் காலமானார்.


அன்னார் நயாவல ஹமீதிய்யா ஜும்மா பள்ளிவாயல் முன்னாள் தலைவர் அல்ஹாஜ் மஃஹூம் தாஹிர் அவர்களின் மனைவியும், அல்ஹாஜ் ரிஸ்வான் (Lanka Tiles Mawanella) உரிமையாளர், பாரா தாஹிர் (ஊடகவியலாளர்), மர்யம் சகீலா (கண்டி), முஹமட் ராபி (குவைட்), மர்யம் நவ்பா (ரம), ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸபருல்லா ஜான் (ரம), சபீகா (கம்பளை), ஜின் பாரா (Colombo), காலம் சென்றவர்களான நிஷாம் (கண்டி), உமர் (திப்பிடிய) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று நயாவல ஹமீதியா ஜும்ஆ பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**(தகவல்: மகன் ரிஸ்வான் தாஹிர்)**



# அமரகீர்த்தி வழக்கின் தீர்ப்பும் கற்கவேண்டிய பாடங்களும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரகீர்த்தி அத்துகோரளை மற்றும் அவரது மெய்ப் பாதுகாவலர் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப் பட்டிருந்த 41 பேரில் 12 பேருக்கு கம்பஹா உயர் நீதிமன்றம் 2026.02.11 ஆம் திகதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருக்கின்றது.

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடத்தப்பட்ட அரசியல் கிளர்ச்சி அல்லது அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அரகலய என்ற எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட தினத்தில் நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக இவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாக நடை பெற்று வந்த வழக்கின் தீர்ப்பே கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டது. மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவின் விசாரணை முடிவிலேயே இந்த தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கின்றது.

அப்போதைய சந்தர்ப்பத்தில் காலி முகத் திடலில் முன்னெடுக்கப்பட்ட அரகலய போராட்டம் நண்பகல் நேரத்தில் அரச படைகளால் தாக்கப்பட்டு விரட்டி அடிக்கப்பட்ட போது சின்னாபின்னப்பட்டு சிதறுண்டு ஓடிய இளைஞர்கள் கூட்டம் நாட்டில் பல பாகங்களிலும் தீ வைப்பு, தாக்குதல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற வன்முறை களில் ஈடுபட்டனர்.

அதன் எதிரொலியாக 2022.05.09 ஆம் திகதி கொழும்பிற்கு வெளியிலும் பல பாகங்களில் வன்முறைகள் இடம்பெற்றன.

இந்த வன்முறைகளால் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்க ளுக்கும் அவர்களது உடமைகளுக்கும் உயிர்களுக்கும் தீங்கு ஏற்பட்டன.

கொழும்பில் அப்போதைய பிரதமராக இருந்த ரனில் விக்கிரமசிங்காவின் உத்தியோக பூர்வ வீடு உட்பட பல அமைச்சர்களது வீடுகள், வாகனங்கள் உட்பட பெறுமதிவாய்ந்த சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப் பட்டன. தீ வைத்து கொழுத்தப்பட்டன.

ஆனாலும் ரனில் விக்கிரமசிங்கா 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் வரையில் பதவியில் இருந்த காலப்பகுதியில் தீ வைத்து நாசமாக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் பொதுஜன பெரமுன ஆதரவு அமைச்சர்களது சொத்துக்களுக்கு கோடிக்கணக்கில் நஷ்டஈடுகள் வழங்கப்பட்டன. இவ்வாறான ஒரு பின்னணியில் தான் 2022.05.09 ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் கோதா கோ ஹோம் என்ற அரகலய (அரசியல் கிளர்ச்சி) இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அலரி மாளிகையில் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் உத்தரவுக்கமைய அங்கு குழுமி இருந்த பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களைக் கொண்டு காலிமுகத்திடல் அரகலய மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டு அரச எதிர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிரு ந்தவர்கள் அடித்துத் துரத்தப்பட்டனர்.

அதன் எதிரொலியாக கொழும்பு, கம்பஹா, களனிய, கண்டி உட்பட நாட்டின் பிரதான நகரங்கள் பலவற்றில் வன்முறை வெடித்தன.

அரச எதிர்ப்பு இளைஞர்கள் அரச ஆதரவு அல்லது பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள் மீது வஞ்சம் தீர்த்தனர். அவ்வாறான ஒரு நிகழ்வே நிட்டம்புவையில் இடம்பெற்றது.

கொழும்பில் ஜனாதிபதி கோதாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு கலந்துரையாடலில் இருந்து பொலன்னறுவையில் அமைந்துள்ள தனது சொந்த வீட்டை நோக்கி பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளை அவரது மெய்ப்பாதுகாவலர் சகிதம் சென்று கொண்டிருந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் நிட்டம்பு வையில் இடம்பெற்ற வன்முறையில் இவர்கள் சிக்கிக்கொண்ட போது அவரது மெய்ப்பாதுகாவலர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் இரண்டு இளைஞர்கள் கொல்லப் பட்டனர். அதனால் ஆத்திரமடைந்த வன்முறையாளர்கள் அமரகீர்த்தியை யும் அவரது மெய்ப்பாதுகாவலரையும் தெருவுக்கு இழுத்தெடுத்து மிக மோசமான முறையில் தாக்குதல் நடத்தி கொலை செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் கடந்த ஒன்றரை வருடங்களின் பின்- னர் 2026.02.11 ஆம் திகதி முடிவுக்கு வந்திருக்கின்றது. இந்த வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த 2024.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவு வழங்கி இருந்தது. அதற்கமைய 41 பிரதிவாதிகளுக்கு எதிராக விஷே டமாக நியமிக்கப்பட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைகள் நடத்தப்பட்டன. இந்த 41 பேரில் 03 பேர் வழக்கு விசாரணை முடிவடைய முன்னரே மரணமடைந்து விட்டனர். மேலும் இரண்டு பேர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். கடைசியாக வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 12 பேருக்கு மரண தண்டனை வழங்க தீர்ப்பளிக்கப்பட்டது. 25 பேர் சகலவிதமான குற்றச்சாட்டக்களில் இருந்தும் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் 04 பேருக்கு 05 வருடங்களில் அனுபவிக்கத்தக்க வகையில் 06 மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன. வழக்கின் விசாரணை அறிக்கை மற்றும் தீர்ப்பு 600 பக்கங்களுக்கு மேற்பட்டதாக இருந்தது.

எனினும் இந்த தீர்ப்பை வழங்கிய மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் குழாமின் தலைமை நீதிபதி சஹான் மாபா பண்டர தெரிவிக்கையில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை சாதாரண சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாததால் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

ஆனாலும் ஏனைய இரண்டு நீதிபதிகளுமான ரஷ்மி சிங்கப்புலி மற்றும் ரஷந்த கொடவெல ஆகியோர் அவர்களது தனித்- தனியான தீர்ப்பில் 12 பேருக்கு அவர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை நிஷரூபிக்க போதுமான சாட்சியங்கள் இருப்பதால் மரண தண்டனை விதிப்பதாக அறிவித்து ள்ளனர். ஆனாலும் சட்டமா அதிபர் இந்த தீர்ப்பில் திருப்தியடையவில்லை என்றும் குறைந்தபட்சம் 31 பேருக்கு கடுமையான தண்டனை விதிக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும் அரச சட்டத்தரணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். அதனால் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வதாகவும் மன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த தீர்ப்பின் மூலம் 12 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பாக நாட்டில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. சமூக ஊடகங்கள் வாயிலாக வெவ்வேறுவிதமான விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த இளைஞர்கள் உயிரை பணயம் வைத்தே அரகலயவில் அரசுக்கு எதிராக ஈடுபட்டுள்ளனர். அன்றைய காலகட்டத்தில் கோதாபய அரசுக்கு எதிராக “கோதாபய கோ ஹோம் கம” மற்றும் “மைனா கோ ஹோம்” என்ற அடிப்படையில் அரச எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. அதுவே ஜே.வி.பி (தேசிய மக்கள் சக்தி) யின் எழுச்சிக்கும் இன்றைய நிலையில் அவர்களால் ஜனாதிபதி பதவி, அமைச்சர் பதவிகள் என்று அரசாட்சியை அனுபவிப்பதற்கு காரணமாக அமைந்தது. இந்த ஜே.வி.பி யினரே நாட்டில் அன்று நிலவிய அசாதாரண சூழ்நிலையை காரணம் காட்டி பல்கலைக்கழக மாணவர்களையும் இளைஞர்களையும் போராட்ட களத்திற்கு கொண்டு வந்தனர். பாராளுமன்றத்தை கூட தீவைத்து கொளுத்தி அழிக்க வேண்டும் என்ற அளவுக்கு முன்னைய ஆட்சியாளர்கள் மீது வெறுப்புணர்வு பரப்பப்பட்டது.

அதனால் உந்தப்பட்டே இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

அப்பாவி இளைஞர்கள் 12 பேர் மரணதண்டனை பெறும் அளவிற்கு இன்று நிலைமை மாறி இருக்கின்றது.

ஆனாலும் போராட்டத்தை தூ ண்டியவர்கள் இன்று அரசாட்சியில் சுகம் அனுபவிக்கின்ற நிலையில் அப்பாவிகள் சிறைக் கூண்டுக்குள் அடைக்கப்பட்டு மரணத்திற்கான நாட்களை எண்ணிக் கொண்டிருக் கின்றனர் என்ற அடிப்படையில் பொதுஜன பெரமுன கட்சியினர் அரசு மீது கடுமையான சீற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும் இந்த வழக்கு தீர்ப்பானது நாட்டில் இடம்பெற்ற வன்முறை யொன்றுடன் சம்பந்தப் பட்ட வரலாற்று முக்கியம் வாய்ந்த தீர்ப்பாகும். இந்த தீர்ப்பால் அவசரமாக வன்முறை உணர்வுக ளுக்கு அடிமையாகக் கூடிய அல்லது பாரதூரம் புரியாமல் வன்முறைகளுக்கு தூண்டப்பட்டால் அவற்றை சரியாக புரிந்துகொள்ளாமல் களத்தில் இறங்கும் இளைஞர்கள் மற்றும் வன்முறை சுபாவம் கொண்டவர்கள் தமக்குத் தாமே தீங்கை தேடிக்கொள்ளாமல் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என்ற படிப்பினையை இந்த வழக்குத் தீர்ப்பு வழங்குவதாக இருக்கின்றது.

அதே நேரம் தற்போது மரண தண்டனை மற்றும் சிறைத்தண்டனை பெற்றவர்களை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வாரா? அவ்வாறாயின் அவர்களுக்காக இந்த அரசு என்ன செய்யும் என்ற கேள்விகள் எழுகின்றன. ஏற்கனவே வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தலையிட்டு இவ்வாறான ஒரு தண்டனை வரை செல்லாமல் மன்னிப்பு வழங்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யத் தவறிவிட்டார் என்று அரசு மீது குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றது.

எதுவானாலும் வழக்கொன்று நடைபெறும் பொழுது ஜனாதிபதி தலையீடு செய்ய முடியாது.

அவ்வாறு செய்தால் அது சட்டத் துறையில் நிறைவேற்று அதிகாரம் தலையிடுவதாக அமையலாம்.

இருந்தாலும் தற்போது தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நிலையில் அரசியல் அமைப்பின் அடிப்படையில் 37 ஆவது பிரிவின்படி தண்டனையை குறைக்க, நீக்க, அல்லது பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதால் அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு அரகலய ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வன்முறைகள் சர்வசாதாரணமான நிகழ்வாக மாறி இருக்கின்றது.

2005 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நாட்டில் பல பாகங்களில் பல தடவைகள் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

திகனை, அலுத்கம, நிகரவெரடிய, மினுவங்கொடை என்று கடந்தகால கறுப்பு வரலாறுகள் இருக்கின்றன.

ஆனாலும் அத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டிருந்த போதும் முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன. எவ்வாறாயினும் இந்த தீர்ப்பானது எதிர்காலத்தில் இன, மத, அரசியல் மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக வன் முறைத் தூண்டல்களுக்கு உட்பட்டு தெருவுக்கு இறங்குபவர் களுக்கு சிறந்ததொரு படிப்பினை காத்திருக்கின்றது என்பதை புலப்படுத்துகிறது. இதுபோன்ற தண்டனை அனுபவிக்க நேரிட்டால் அத்தகையவர்களை பாதுகாப்பதற்கு யாரும் இல்லை, அவர்களது குடும்பம், பிள்ளை குட்டிகள் நடுத்தெருவுக்குத் தான் என்ற நிலையை காட்டு கின்றது. அதனால் அரசு இவர்களுக்கு மன்னிப்பு வழங்கினாலும் இல்லாவிட்டாலும் சட்டம் அதன் கடமையை சரியாக செய்திருக்கின்றது என்பது புலனாகின்றது.



**அல் அஸ்லாப் நினைவுப் பேருரைகள் தொடர் 7**

# சமூக முன்னேற்றத்துக்கு அரும் பணியாற்றிய தேசபந்து அப்துல் டபிள்யூ எம்.அமீர்

**அல் அஸ்லாபின் இரண்டாவது நினைவுப் பேருரைகள் அமர்வில் உதயம் ஆசிரியர் என்.எம்.அமீன் ஆற்றிய உரையின் தொகுப்பு**



2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி மறைந்த மர்/ஹூம் சேர் அமீரை நினைவு கூர்வதற்காக ஏற்பாடு செய்து இதே நாளிலேதான் அவர் எம்மை விட்டுப் கொண்டிருக்கின்றார்கள். பிரிந்தார். நாம் இந்த நிகழ்வில் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக அளப்பரிய பங்களிப்புச் செய்த மர்ஹூம் மௌலவி எம்.ஜே.எம். றியாழ் அவர்கள், கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆகியோரையும் சேர் அமீருடன் இணைந்து நினைவு கூருகிறோம்.

முதற்கண் இந்த மூன்று பெருந்தகைகளையும் நினைவு கூர்ந்து அவர்களது பணிகளை நாட்டுக்கும் குறிப்பாக இளைய தலைமுறைக்கும் எடுத்துக்காட்டும் இந்த முயற்சியை ஏற்பாடு செய்துள்ள இந்த அல் அமைப்பின் நிர்வாகிகளுக்கு இந்த பாராட்டுக் களை அஸ்லாஃப் தெரிவிக்கின்றேன்.

இன்றைய நாள் நினைவு கூரும் தேசபந்து அப்துல் வஹாப் முஹம்மது அமீர் கொழும்பு மருதானையைச் சேர்ந்தவர். சேர் அமீரை பிரபலமான ராஜதந்திரியாகவும் சமூக சேவையாளராகவும், வர்த்தகராகவும் அடையாளப்படுத்தலாம். முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றிய இவர் வாழ்ந்த காலத்தில் முழு நாட்டிலுமே பிரபலமான சமூக சேவையாளராகத் திகழ்ந்தார்.

கொள்ளுப்பிட்டி ரன்முத்து மற்றும் உமர்கையாம் ஹோட்டல் களை நிர்மாணித்து நாட்டின் சுற்றுலாத் துறைக்குப் பங்களிப்புச் செய்தார்.

கொழும்பு மாநகரின் இதயம் போன்ற இடத்தில்தான் தனது ஹோட்டலை நிறுவினார்.

எல்லோரையும் கவரக்கூடிய ரன்முத்து என்ற பெயரைத் தனது ஹோட்டலுக்கு வைத்தார்.

இந்த ஹோட்டல் சுற்றுலாத் துறைக்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்தின் நலனுக்கும் ஊடகத்துறை வளர்ச்சிக்கும் மிகவும் மையமாக இருந்தது.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக் கும் தம் திருமணம் போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு தலைநகரில் உள்ள ஒரு நிலையமாக ரன்முத்து ஹோட்டல் திகழ்ந்தது.

இதனால் ஆயிரக்கணக்கான நடுத்தரக் குடும்பங்கள் நன்மை பெற்றன. இது தவிர முஸ்லிம் அமைப்புகள் ஒன்று சேருமிடமாக ரன்முத்து ஹோட்டல் திகழ்ந்தது.

மர்/ஹூம் அமீர் தனது ஹோட்டலை இலவசமாகவே வழங்கினார். இதில் அவர் இனம் மத, கட்சி பேதம் பார்க்கவில்லை. ரன்முத்து ஹோட்டல் எல்லோருக்கும் எப்போதும் திறந்த ஒன்றாகவே இருந்தது. மர்ஹூம் அமீர் அவர்களது இறுதி தசாப்த காலத்தில் அவருடன் மிக நெருங்கி சமுதாயப் பணி புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அக் காலத்தில் இனப் பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மற்றும் வடமத்திய முஸ்லிம்களின் துன்ப துயரங்களைப் போக்குவதில் அல்ஹாஜ் அமீர் இரவு பகலாக உழைத்தார்.

**நாம் இன்று நினைவு கூரும் தேசபந்து சேர் ஏ. டபிள்யூ எம். அமீர் அவர்கள் இறைவனடி எய்தி இன்றுடன் சரியாக 24 ஆண்டுகள் ஆகின்றது**

தனது ஹோட்டல் ஒரு சுற்றுலா ஹோட்டல் என்பதனை மறந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் மையமாகப் பயன்படுத்த இடமளித்தார்.

வடக்கிலிருந்து 24 மணி நேரத்தில் புலிகளால் வெளியேற்றப் பட்ட சந்தர்ப்பத்தில் பல முஸ்லிம் இயக்கங்களை ஒன்றுபடுத்தி அகதிகள் நிவாரண அமைப்பு உருவாக்கப்பட்டது.


அப்போதைய சபாநாயகர் மர்/ஹூம் எம்.ஏ. பாகீர் மாகார் உட்பட முஸ்லிம் அரசியல் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சு.சு.மு. அமைப்பின் தலைவராக சேர் அமீரே தெரிவானார்.

அதன் முதலாவது செயலாளராக அல்ஹாஜ் அமீருடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அக் காலத்தில் தனது ஹோட்டலை அகதிகள் நிவாரண மளிக்கும் நிலையமாக மாற்றிச் செயற்பட்டார். அவர் அகதிகளுக்கு நிவாரணப் பொருட்களை திரட்டும் மையமாக ரன்முத்து ஹோட்டல் இருந்தது.

அங்கிருந்து நூற்றுக்கணக்கான லொறி, வேன்களில் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டமை எனக்கு இன்றும் பசுமையான நினைவாக இருக்கின்றது.

வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்கள் தஞ்சமடைந்த வடமத்தியமாகாணம் மற்றும் கிழக்கின் எல்லைக் கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தார்.





அவரது இச் சேவையினை தற்காலத்தில் மறந்திருந்தாலும் மூத்த தலைமுறை யினர் அவரது சேவையை இன்னும் பேசி வருகின்றார்கள்.

சேர் அமீர் 43 வருடங்களாக டொமினிகன் குடியரசின் கௌரவ கௌன்சில் ஜெனரலாகப் பணி புரிந்தார்.

நீண்ட காலமாக இவ்வாறான ஒரு பதவியை வகித்தவராக சேர் மட்டுமே இருக்கிறார்.

டொமினிக்கன் அரசு இவருக்கு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இலங்கை - இந்திய சங்கம், ஸ்ரீலங்கா, லத்தீன், அமெரிக்க, கரீபியன் சங்கம், இலங்கை பிலிப்பைன்ஸ் சங்கம் போன்றவற்றை ஸ்தாபித்து சர்வதேச நாடுகளுக்கும் இடையிலான உறவினை மேம்படுத்தினார். ஆங்கில மொழியை நாட்டில் மேம்படுத்தும் நோக்கில் சேர் அமீர் இலங்கை ஆங்கிலம் பேசும் சங்கத்தில் பணி புரிந்ததோடு இலங்கை ஆங்கிலம் பேசுவோர் சங்கத்தின் உப தலைவராகவும் செயற்பட்டார்.

இந்த இயக்கம் கட்டுநாயக்காவில் நினைவு மண்டபம் ஒன்றை நிர்மாணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் அமீர் அரசியல்வாதியாக இல்லாவிட்டாலும் பல்வேறு காரணிகளால் பிரிந்து செயற்பட்ட பிரிந்து செயற்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகளை ஒன்றுபடுத்தும் ஆளுமை மிக்கவராகக் காணப்பட்டார். பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது தனது ஹோட்டலில் எல்லா அரசியல்வாதிகளையும் அழைத்து கடுமையான நிலைப்பாடுகளை எடுத்து அவர்களை ஒற்றுமைப் படுத்தியதை நான் நேரடியாகக் கண்டிருக்கின்றேன். இனங்களிடையே நல்லிணக்கத்தைக் கட்டி யெழுப்புவதற்காக உழைத்த இவர், முஸ்லிம் சமூகத்தின் ஐக்கியம் குறித்து அடிக்கடி குரல் எழுப்பினார். சமூகத் தலைவர்களி டையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோது, அவர்களை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பல பிரயத்தனங்களை மேற் கொண்டார்.

சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் ஸ்தாபக அங்கத்தவரான இவர், சேர் ராஸீக் பரீதுடன் நெருங்கிச் செயற்பட்டார். கொழும்பு தெவட்டகஹ பள்ளி வாசலின் பிரதம நம்பிக்கையாளராக இவர் பணி புரிந்தார். இவரது காலத்திலே பள்ளிவாசலின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாயின. தலைநகரில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒரே நேரத்தில் தொழக்கூடிய வகையில் பள்ளிவாசலைப் புனரமைக்கும் பணியில் இவரது பங்களிப்பு முக்கியமானது.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் இவரது நிதி உதவி மூலம் பள்ளிவாசல்களும் அறபு மத்ரஸ ாக்களும் நிர்மாணிக்கப்பட்டன.

இதில் விஷேசம் என்னவென்றால், எவ்வித பிரஸ்தாபமும் இன்றியே இந்தப் பள்ளிவாசல்கள், மத்ரஸ ாக்கள் நிர்மாணிகாகப்பட்டுள்ளன. இவை பற்றிய விவரங்கள் அவரது குடும்பத்துக்குக் கூட தெரியாதுள்ளது.

அல்ஹாஜ் அமீர் தனது சொத்துக்களை நம்பிக்கை நிதியம் ஒன்றுக்குப் பாரப்படுத்தினார்.

இந்த நம்பிக்கை நிதியம் மூலம் பல இஸ்லாமிய நிறுவனங்கள் மற்றும் குடும்பத்தவர்கள் இன்னும் பயனாளிகளாக இருந்து வருகின்றனர்.

இந்த நற்பணி சதகத்துல் ஜாரியாவாக அவரது மருமகனும் தற்போதைய டொமினிக்கன் குடியரசின் கௌன்சில் ஜெனரலாகப் பணிபுரியும் ஹபீபுல்லாஹ் வபலுல் தெரிவிக்கின்ற கருத்துப்படி மேற்படி நம்பிக்கை இதயத்தின் நிர்வாகிகளாக பல முஸ்லிம் புத்திஜீவிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிதியம் மூலம் வைத்தியத் தேவையுடையோருக்கு உதவி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமூகம் நெருக்கடி மற்றும் சவால்களை எதிர்நோக்கிய போது சேர் அமீர் அந்த இடத்தில் இருந்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தார். காலத்துக்கு காலம் பதவிக்கு வந்த அரசியல் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதனால் அதனை அவரால் விரைவில் செய்ய முடிந்தது. முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார். இவை தவிர, டாக்டர் எம்.சி.எம். கலீல், சேர் ராஸீக் பரீட், கலாநிதி பதியுதீன் மஹ்மூத், எம்.ஏ. பாகீர் மாகார், எம்.எச். முஹம்மட், ஏ. அஸீஸ் போன்ற மறைந்த முஸ்லிம் தலைவர்களுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார். இவர்களுடன் அன்று முஸ்லிம், முஸ்லிமல்லாதவர்களுடன் தொடர்பு வைத்திருந்ததை சமூக நலனுக்காகப் பயன்படுத்தினார்.


ஏழைகள் மற்றும் துயரப்படுபவ ருக்கு உதவும் உயர் பண்பினைக் கொண்ட அமீர், முஸ்லிம் சமூகம் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதை விரும்பினார்.

அல்ஹாஜ் அமீர் பிரபலமான மாணிக்க வியாபாரியாக இருந்தார். அவருடைய தூதுவர் பணிக்கு மேலதிகமாக மாணிக்க வர்த்தகத்துக்காக உலகின் பல நாடுகளுக்குச் சென்று வந்தார். அப்போது கப்பலிலே துறை முகத்திற்கு வரும் வெளிநாட்டவர் களுக்கு மாணிக்க கற்களினை சில நேரங்களில் அவர்களுடன் இணைந்து விற்பனை செய்வார். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு கப்பலிலே பயணம் செய்துள்ளார்.

சமூகத்தில் கௌரவமளிக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்து கௌரவம் வழங்கும் சிறப்புக் குணமொன்று மர்ஹூம் அமீர் அவர்களிடம் இருந்தது. யார் யார் சமூகத்தின் உயர் அந்தஸ்துக்கு வருகின்றார்களோ அவர்களை அழைத்து கௌரவித்திருக்கிறார். நினைவில் இருக்கின்றது.

கலாநிதி ஹூஸைன்மியா தனது கலாநிதி பட்டத்தை முடித்து, தாயகம் திரும்பியதும் பிரமாண்டமான சகதரப்பு முஸ்லிம் தலைவர்களை அழைத்து பாராட்டியது எனக்கு என்றும் நினைவில் இருக்கின்றது.

தொகுப்பு
ஹில்மி முஹம்மத்



# மனநலமும் ஆலோசனையும்




## O/L பரீட்சை எழுதும் மாணவர்களின் பெற்றோர்களே!

எமது பிள்ளைகள் பரீட்சையை எதிர் கொள்ளத் தயாராக இருக்கும் முக்கிய நேரத்தில், பெற்றோர்கள் நடந்துகொள்ள வேண்டிய சில வழிமுறைகளை உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இவற்றை பின்பற்றுவதன் மூலம், பிள்ளைகளின் உள, உடல் ஆரோக்கிய த்தை மேம்படுத்தி, ஊக்கம், தைரியம் வழங்கி, பரீட்சையை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வழிகாட்டலாம்.

**1. அமைதியாக பேசுவோம்**

பிள்ளையுடன் பேசும் போது அவசரப்படாமல், அமைதியாக பேசுவோம். பெற்றோரின் வார்த்தைகள் மிகவும் சக்திவாய்ந்தவை அவை ஆறுதல் தரும்.

அதனால், ஊக்கம் தரும் அழகான வார்த்தைகளை பயன்படுத்துவோம்.

அவர்கள் ஏதேனும் சொல்ல விரும்பினால், நாம் அமைதியாக செவிமடுப்பதை அவர்களுக்கு உணர்த்துவோம்.

எமது பதட்டத்தையோ கவலையையோ அவர்களிடம் காட்டாதிருப்போம்.

**2. கோரிக்கைகளை தவிர்த்துக் கொள்வோம்**

“நீ சித்தியடையவேண்டும்”, “நீ எப்படியாவது வெற்றி பெறவேண்டும்” போன்ற அழுத்தங்கள் இந்த நேரத்தில் நல்லதல்ல.

இந்த முக்கிய தருணத்தில், நாம் பிள்ளைகளுக்கு ஆறுதலாக இருப்பவர்களாக இருக்க வேண்டும்.

அழுத்தமின்றி, ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் அவர்களை தைரியப்படுத்துவோம்.

**3. மனச்சோர்வை புரிந்து கொள்வோம்**

பிள்ளை பரீட்சை பற்றி மனச்சோர்வாக இருந்தால், அதை புரிந்து கொண்டு அவசரமாக எதையும் சொல்லாமல் அமைதியாக நடந்து கொள்வோம்.

“நீங்கள் செய்வது போதுமானது” என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம்.

“நீங்கள் மற்றவர்களுடன் போட்டியிட அல்ல, உங்கள் திறமையை வெளிப்படுத்தவே படிக்கிறீர்கள்” என்று எடுத்துச் சொல்வோம்.

**4. நேர்மறை சுய எண்ணங்களை உருவாக்க வழிகாட்டுவோம்**

* நான் தைரியசாலி
* இந்தப் பரீட்சையில் நான் சிறப்பாகச் செய்வேன்
* நான் படித்திருக்கிறேன்
* எனக்கு பதில்கள் தெரியும்
* என்னால் தைரியமாக பரீட்சையை எதிர்கொள்ள முடியும்.

போன்ற வாசகங்களை தினமும் சொல்லப் பழக்கப்படுத்துவோம்

**5. நல்ல சிந்தனையை வளர்ப்போம்**

**“நல்ல சிந்தனையால் மட்டுமே வெற்றி பெற முடியும்.”**

அதனால்:

* “என்னால் முடியும்”
* “நான் சாதிப்பேன்”

என்ற எண்ணங்களை மனதில் வளர்த்துக்கொள்ள ஊக்குவிப்போம்.

**6. ஒப்பிடுவதை முற்றாக தவிர்ப்போம்**

**பிள்ளையை மற்றவர்களுடன் ஒப்பிடவே வேண்டாம்.**

அவர்களுக்கும் தங்களை ஒப்பிட வேண்டாம் என்று சொல்லிக் கொடுப்போம்.

மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை விட, உங்கள் திறமைகளில் கவனம் செலுத்துங்கள் என்று அறிவுறுத்துவோம்.

**7.கவலைப்படத் தேவையில்லை என்பதை உணர்த்துவோம்**

பிள்ளை கவலையுடன் இருந்தால்:

“கவலைப்பட வேண்டாம். எதிர்பார்த்த அளவுக்கு முடியவில்லை என்றாலும் உங்களை நீங்களே குறை சொல்ல வேண்டாம்.

இப்போது கிடைத்துள்ள இந்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி, உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்” என்று சொல்லுவோம்.

**8.பிள்ளையின் தலை தடவி பிரார்த்திப்போம்**

பெற்றோரின் பிரார்த்தனை பிள்ளைக்கு பெரும் நம்பிக்கையை அளிக்கும்.

அழகான, உண்மையான பிரார்த்தனைகள் மிகுந்த சக்தி கொண்டவை.

அன்பின் பெற்றோர்களே!

எமது பிள்ளைகளின் பரீட்சை பயணத்தில் நாம் மிக முக்கிய பங்கு வகிக்கிறோம்.

எமது வழிகாட்டுதலும் ஆதரவும், அவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கைப் பயணத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்வோம்.

“எமது பிள்ளைகள் மனதைரியத்துடன் பரீட்சையை எதிர்கொண்டு, நல்ல பெறுபேறுகளை பெற்று, கல்வி மற்றும் வாழ்க்கை பயணத்தில் வெற்றி பெற வேண்டுமென மனம் திறந்து பிரார்த்திக்கிறோம்.”!



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

மங்கையொளி
உதயம்

**பயாஸா பாஸில்**




அன்பான மாணவர்களே,

நீண்ட விடுமுறை என்றால் என்ன நினைவிற்கு வருகிறது? ஓய்வு, விளையாட்டு, மகிழ்ச்சி – இல்லையா? ஆம், விடுமுறை என்பது மகிழ்ச்சிக்கான காலம். ஆனால் அது நம் வாழ்க்கையில் வளர்ச்சியை விதைக்கும் பொன்னான வாய்ப்பும் ஆகும்.

முழு நாளையும் உறங்கிக் கழிப்பதும், கைபேசியில் நேரத்தை வீணடிப்பதும் விடுமுறையின் நோக்கம் அல்ல. அதேபோல், முழுக்க முழுக்க பாடப்பயிற்சியிலும் மூழ்கி விடுவதும் சரியல்ல. விடுமுறை என்பது ஓய்வும் வளர்ச்சியும் இணையும் சமநிலை நேரம் ஆக வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சிறிய அட்டவணை அமைத்துக் கொள்ளுங்கள். காலை நேரத்தில் ஒரு மணி நேரம் பாடங்களை லேசாக மீள்பாருங்கள். புத்தக வாசிப்பை பழக்கமாக மாற்றுங்கள். ஒரு நல்ல கதை, ஒரு வாழ்க்கை வரலாறு, ஒரு அறிவியல் புத்தகம் , இவை உங்கள் சிந்தனையை விரிவாக்கும். விளையாட்டு நேரத்தை தவற விடாதீர்கள். உடல் ஆரோக்கியம் மன ஆரோக்கியத்திற்கும் அவசியம். வெளியில் ஓடி விளையாடுங்கள், சைக்கிள் ஓட்டுங்கள், தோட்டத்தில் நேரம் செலவிடுங்கள்.

விடுமுறையை புதிய திறன்களை கற்கும் காலமாக மாற்றுங்கள். ஓவியம், இசை, கைவினை, சமையல், எழுத்து , எந்தத் திறனாக இருந்தாலும் முயற்சி செய்யுங்கள். உங்கள் உள்ளார்ந்த திறமைகள் இந்த நேரத்தில் மலரும்.

மேலும், பெற்றோருக்கு உதவுங்கள். வீட்டுப் பணிகளில் சிறிய பங்கு ஏற்றுக் கொள்ளுங்கள். அது பொறுப்புணர்வை வளர்க்கும்.

அன்பான மாணவர்களே,

இன்றைய விடுமுறை நாள்கள் நாளைய வெற்றிக்கான அடித்தளம். நேரத்தை மதித்து பயன்படுத்தினால், இந்த நீண்ட விடுமுறை உங்கள் வாழ்க்கையின் அழகான நினைவாகவும் பயனுள்ள அனுபவமாகவும் மாறும்.

விடுமுறையை மகிழ்ச்சியுடனும் பயனுடனும் கழிப்போம்.

**நன்றி.**

# புத்தளத்தில் விஷேட தேவையுடையோரின் உற்பத்தி பொருட் கண்காட்சியும் விற்பனையும்



(சியாஜ்)

புத்தளம் நகரின் “விஷேட தேவையுடையோரின்” கை வண்ணத்தில் உருவான சுய உற்பத்தி பொருட்களுடைய கண்காட்சி மற்றும் விற்பனை கூடம் என்பன புத்தளம் கொழும்பு முகத்திடலில் கடந்த செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றது.

இந்நிகழ்வினை புத்தளம் மாவட்ட செயலகம், புத்தளம் மாநகர சபை, இலங்கை சமாதான பேரவை, ஒடெப்ட் நிறுவனம் மற்றும் விங்ஸ் உமன் லீடர்ஸ் அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ரவிசேட தேவையுடையவர்களுடைய கை வண்ணத்தில் உருவான பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு அதிதிகளும், பொதுமக்களும் ஆர்வத்தோடு கலந்து கொண்டு காட்சி பொருட்களை கொள்வனவு செய்தனர்.

இந்நிகழ்வில் சமய தலைவர்கள், புத்தளம் மாநகர மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத், உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், சர்வ மத ஒன்றியத்தினர், புத்தளம் பிரதேச செயலாளர் குமுது பி. விதானகே, மகளிர் அமைப்புகளின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நிந்தவூரில் “வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்” நூல் வெளியீட்டு விழா



(மேஜர் துவான் ஷஹி)

ஓய்வு பெற்ற சிரேஷ்ட வானிலை அதிகாரியும், ஊடகவியலாளருமான கலாநிதி முகம்மட் சாலிஹீன் எழுதிய “வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்” எனும் நூலின் வெளியீட்டு விழா நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அறிவியல் மற்றும் கல்வி ஆர்வலர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில், நூல் குறித்து விரிவான நூல் விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டன. வளிமண்டலவியல் தொடர்பான அடிப்படை கருத்துக்களை எளிமையாகவும், அறிவியல் துல்லியத்துடனும் எடுத்துரைக்கும் இந்த நூல், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது வாசகர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பேராசிரியர்கள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.ஏ.எம். தாஹிர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நூலை வெளியிட்டு வைத்ததுடன், நூலாசிரியரான கலாநிதி முகம்மட் சாலிஹீனைப் பாராட்டி உரையாற்றினார். அவர் தனது உரையில், அறிவியல் நூல்களை தாய்மொழியில் வெளியிடுவது சமூகத்தின் அறிவுத்தள வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் எனக் குறிப்பிட்டார்.

வளிமண்டலவியல் துறையில் நீண்ட கால அனுபவமும், ஆய்வுப் பங்களிப்புகளும் கொண்ட கலாநிதி முகம்மட் சாலிஹீனின் இந்த நூல், இலங்கைத் தமிழ்ச் சூழலில் ஒரு முக்கிய அறிவியல் ஆவணமாகக் கருதப்படுவதாக நிகழ்வில் பங்கேற்றோர் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக் கழக புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், புவியியல் துறைத் தலைவர் கலாநிதி ஐ.எல். மொஹமட் ஜாஹிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். ஹனீபா உட்பட ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## தஹறாம்பளை விவசாய வீதிகள் வெள்ள அனர்த்தங்களினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது



(கே.எ. ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் தஹறாம்பளை விவசாய வீதிகள் வெள்ள அனர்த்தத்தால் சேதமடைந்து விவசாயிகளின் போக்குவரத்திற்கு பெரும் இடையூராக உள்ளதால் கமத்தொழில் அமைச்சின் விஷேட நிதியில் தஹறாம்பளை விவசாய வீதி புனரமைக்கப்பட வேண்டும் என்ற முன் மொழிவு சமர்ப்பித்ததற்கு அமைவாக இவ்விவசாய வீதிகளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தலைமையில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளருமான எஸ்.எம்.எம்.முஷாரப், தஹறாம்பளை விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் இணைந்து பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் அரசின் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான தொடர் போராட்டம்




(சியாஜ்)

இலங்கையில் தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில் தற்கால அரசு பயங்கரவாத செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்காக புதிய பயங்கரவாத தடைச்சட்டம் ஒன்றை கொண்டு வருகின்றமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை அரசுக்கு எடுத்துக் காட்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதி அமைச்சுக்கு முன்னால் இடம் பெற்று வருகிறது. அதன் வரிசையில் 13 ம் திகதி வெள்ளிக் கிழமை மலையக மக்கள் பிரதிநிதிகள், மலையக சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய சிவில் அமைப்புகள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர்.

தற்போது நடைமுறையிலிருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தை தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நிறுத்துவதாக கூறிய அரசு வேறு பெயரில் புதிய சட்டம் ஒன்றை கொண்டு வருவதை மக்கள் எதிர்ப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்தோடு மலையக மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடும் சந்தர்ப்பங்களில் கூட இந்த புதிய பயங்கரவாத சட்டத்தின் ஊடாக அம் மக்களை தடுக்க முடியுமென கருத்துக்களையும் முன் வைத்தனர்.

## சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் (07) இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஏ.சி. முஹம்மது அஷ்ரபின் தலைமையில் பொதுச் சபை கூடி நிர்வாக சபை தெரிவு தலைவரினால் அறிவிக்கப்பட்ட போது, பொதுச்சபை அங்கத்தவர் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் வை. அகமட்லெவ்பையினால் கீழ்வரும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் பெயர் குறித்து முன்மொழிந்த போது, அதனை பொதுச்சபை உறுப்பினர் ஒருவர் வழிமொழிய, பொதுச்சபையும் ஏக மனதாக ஏற்றுக்கொண்டது.

பொதுச்சபை கூட்டத்திற்கு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.சி. ஜலால்டீன் கலந்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் பெயர் விபரம் பின்வருமாறு,

சங்கத்தின் புதிய தலைவராக ஆதம்பாவா அப்துல் வஸீர், உப தலைவராக செய்னுத்தீன் அப்துல் லத்திப் தெரிவு செய்யப்பட்டதோடு, இபாஸ் அப்ஹம், அப்துல் மனாப், முகம்மது ஹனீபா, முகம்மட் றசீட், ஹமீதா, பாத்திமா பர்ஹானா, உம்முல் பைறோஸா ஆகியோர் சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபையின் ஏனைய உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தேசிய ஷூரா சபையின் வரி மற்றும் சுங்கத் துறை சார் விழிப்புணர்வு கருத்தரங்கு





தேசிய ஷூரா சபையின் சமூக-பொருளாதார உபகுழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கை வர்த்தகர்களுக்கான வர்த்தக வசதி மற்றும் ஊக்குவிப்பு கருவிகள் - 2026" எனும் மகுடத்திலான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) கொழும்பு தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

தேசிய ஷூரா சபையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம்.ஸுஹைர் தலைமையில் இந்த நிகழ்வின் முக்கியத்துவம் குறித்து உரை நிகழ்த்தினார்.

தேசிய ஷூரா சபையின் சமூக-பொருளாதார உப குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஏ.எல். ஹக்கீம் மொஹமட் தனது வரவேற்புரையில் இக் கருத்தரங்கின் பிரதான நோக்கம் மற்றும் அது முன்னெடுக்கும் வழிமுறைகள் குறித்துத அறிமுகத்தை வழங்கினார்.

பிரபல தொழிலதிபரும், சமூக சேவையாளரும் வீல்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைவருமான ரீ.எல்.எம். நவாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சுமார் 80-க்கும் மேற்பட்ட முன்னணி தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பிரதேச சபையில் கௌரவிப்பு நிகழ்வு





**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்களில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு (11) ஓட்டமாவடி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி மற்றும் மீராவோடை ஆகிய பொதுநூலகங்களின் நூலகர்களான எம்.சீ.எம்.சரீப் ஹூஸைன், எம்.எம்.பாத்திமா பானு ஆகியோர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.எம்.ஹலால்தீன் கலந்து கொண்டார்.

இதில், பிரதேச பாடசாலை மாணவர் பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின்போது, மீராவோடை பொது நூலகத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற எஸ்.எம்.சமட் மற்றும் மீராவோடை பொது நூலக சிறந்த வாசிப்பாளர் எச்.எம்.எம்.அலியார் ஆகியோரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை மாநகர சபையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கௌரவிப்பு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபையில் கடமையாற்றி, அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்ற வருமானப் பரிசோதகர் ஏ.ஜே. சமீம் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ். இராசன் ஆகியோருக்கான பிரியாவிடை மற்றும் கௌரவிப்பு நிகழ்வு புதன்கிழமை (11) மாநகர சபை கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்சன், ஆயுர்வேத வைத்திய அதிகாரி ஜ/மானா ஹஸீன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டதுடன் நிதி உதவியாளர் எஸ். சுபாஷினி, சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.எம். டிலிட் நௌசாட் மற்றும் நூலகர் ஏ.எம். முஸ்தாக் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

இதன்போது மேற்படி ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரினதும் நீண்ட கால உன்னத சேவைகள் குறித்து பிரஸ்தாபித்து, பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டதுடன் வாழ்த்துப்பா கையளிக்கப்பட்டு, பரிசுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் பொன்னாடைகள் போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.

# பலகத்துறை 'அல்-பலாஹ்' மகளிர் கல்லூரிக்கு காணி வாங்க நிதியுதவி!



**(எம்.ஜே.எம். தாஜுதீன்)**

பலகத்துறை 'அல்பலாஹ்' கல்லூரியில் தற்பொழுது ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் முகமாகவும், எதிர் காலத்தில் மாணவர்களது ஒழுக்க விழுமியங்களை கருத்தில் கொண்டும், ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் இரு வேறு பாடசாலைகளை உருவாக்கும் நோக்கத்துடனும், புதிய காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் பழைய மாணவர் சங்கம் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

பாடசாலைக்கு அண்மையில் 97 பர்ச்சஸ் காணி ஒன்று பாடசாலை நிர்வாகத்தினால் அடையாளம் காணப்பட்டு அதனை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

தனவந்தர்கள் தனிப்பட்ட முறையிலும், இயக்கங்கள் அமைப்பு ரீதியாகவும், தனிப்பட்டவர்கள் உண்டியல் சேமிப்பு முறையிலும் நிதி உதவி வழங்கி வருகின்றனர்.

பலகத்துறை 'ஜலால்தீன் பவுண்டேஷன்' அமைப்பின் சார்பில் இரண்டு லட்சம் ஷரூபாவுக்கான காசோலை ஒன்று கடந்த 03ஆம் திகதியன்று பாடசாலை காரியாலயத்தில் பாடசாலை உதவி அதிபர் எம்.எல்.எம்.லுதுபி அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜெலால்தீன் பவுண்டேஷன்' அமைப்பின் உப தலைவர்களில் ஒருவரான. எஸ்.ஏ.எம். பௌஸான், பொருளாளர் எம். ஜே. எம். சகாப்தீன் ஆசிரியர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரும் காணிக் கொள்வனவுச் சங்கத்தின் பொருளாலருமான ஹஸன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமாபாதின் துயரம் கழிவுநீர் பிரச்சினை கல்முனை மாநகர சபை அவசர நடவடிக்கை





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை, இஸ்லாமாபாத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற கழிவுநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக கல்முனை மாநகர சபை விஷேட வேலைத் திட்டம் ஒன்றை (13) முன்னெடுத்துள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் பணிப்புரைக்கு அமைவாக இதற்கான அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத் தொகுதிக்கான கழிவுநீரகற்றல் முறைமையில் உள்ள தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக அங்குள்ள வீடுகளில் இருந்து கழிவு நீர் சேகரிப்புத் தாங்கிக்கு வருகின்ற கழிவு நீர் சீராக அகற்றப்படாமல் அப்பகுதி முழுவதும் பரவுவதால் பாரிய துர்நாற்றமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

இதனால் குறித்த வீட்டுத் தொகுதியில் வாழ்கின்ற மக்கள் மாத்திரமல்லாமல் சுற்றிவரவுள்ள அனைத்து மக்களும் பெரும் அசௌகரியங்களையும் டெங்கு உள்ளிட்ட நோய் அபாயங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இஸ்லாமாபாத் எனும் பாரம்பரிய ஊர் ஒன்றின் பாரிய துயரமாக இப்பிரச்சினை கருதப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டே தமது பொறுப்புக் கூறலுக்கு அப்பாற்பட்ட இப்பாரிய பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு வழங்க கல்முனை மாநகர சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன்போது பிரதான தாங்கியில் இருந்து சுத்திகரிப்புக்காக செல்கின்ற கழிவு நீர்க் குழாய் பாதையில் அமைந்துள்ள பல துணைத் தாங்கிகள் திறக்கப்பட்டு, அவற்றில் நிரம்பியிருந்த பிளாஸ்டிக் போத்தல்கள், பெம்பஸ்கள் மற்றும் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டும் திரவங்கள் வெளியேற்றப்பட்டும் சீர் செய்யப்பட்டது.

அடிக்கடி இப்பிரச்சினை தலைதூக்குகின்ற சந்தர்ப்பங்களில் இதற்கு முன்னரும் பல தடவைகள் கல்முனை மாநகர சபை இவ் விடயத்திற்கு உதவி வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முறையான திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்மாடி வீட்டுத் தொகுதி என்பதால் அதன் பராமரிப்புக்கென ஆதன முதலீட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலமே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

கல்முனை, இஸ்லாமாபாத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் கடந்த பல வருடங்களாக இக்குழு செயற்பாட்டில் இல்லை எனத் தெரிய வருகிறது. இது விடயத்தில் சம்மந்தப்பட்ட தரப்பினர் கூடிய கவனம் செலுத்தி, கொண்டோமினியம் குழுவை செயற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் படுகிறது.

# பிரதியமைச்சர் சரத்தினால் கல்வெல்ல ஜும்ஆ பள்ளி வீதி அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்





**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

கிராமிய மேம்பாட்டு 2025 திட்டத்தின் கீழ் பொலன்னறுவை கல்வெல்ல பழை ஜும்மா பள்ளிவாசல் வீதியின் அபிவிருத்தி பணிகள் பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத்தினால் (11) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட வுள்ளதுடன் இதற்காக 43 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நேரடி தொழிலாளர் பங்களிப்பின் கீழ் சுமார் இரண்டு மாதங்களில் புனரமைப்பு பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ரத்னசிறி, தமங்கடுவ பிரதேச சபையின் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை பொறியாளர் மற்றும். பிரதேச வாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு




**(யூ.கே. காலித்தீன்)**

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் (11) பேரவையின் தலைமைக் கரியாலயத்தில் ஸூரா சபையின் தலைவர் அஷ்ஷேய்க் ஐ.எல்.எம். ரஹ்பி (ஹிழ்ரி) தலைமையிலும், ஸூரா சபையின் செயலாளர் எம்.சி.எம். ரிலாவின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றது.

ஸூரா சபையின் தலைவர் அஷ்ஷேய்க் ஐ.எல்.எம் ரஹ்பி (ஹிழ்ரி) பேரவையின் களப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கிய போது, இப்பிரதேசத்தில் எத்தனை இளைஞர்கள் இருந்தும் எம்மில் சிலரை மாத்திரம் இறைவன் தெரிவு செய்து இவ் உயரிய சேவயினை வழங்குவதற்கு உருதுனையாக இருந்த இறைவனுக்கு முதற்கண் நன்றியினை தெரிவிப்பதோடு, நன்மையான காரியம் எதுவாக இருந்தாலும் ஆரம்பித்து வைத்தவர்களுக்கு மரணித்தாலும் உலகம் முடியும் காலம் வரை நன்மை வந்து கொண்டே இருக்கும். அந்தவகையில் எமது களப்பணியாளர்களின் சேவைக்கு இவ்வுலகில் எவ்வளவு ஊதியமாக வழங்கினாலும் ஈடாகாது எனவும் அறிவுரை வழங்கினார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்குள் பல்வேறு சமூக சேவை அமைப்புக்கள் கடந்த காலங்களில் காணப்பட்ட போதிலும் அவற்றினால் மக்களின் இறுதிக் கடமையாகிய ஜனாஸா கடமையைச் செவ்வனே நிறைவேற்றக்கூடிய ஓர் அமைப்பு இல்லாமையை இட்டு கவலைப் பட்டனர். அதனை நிபர்த்தி செய்து எல்லோராலும் தேசிய ரீதியில் நன்மதிப்பை பெற்ற எமது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் சேவை அளப் பெரியது. எனவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து பேரவையின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவில் பின்வருவோர் சபையோரினால் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எஸ்.எம். நசீர், பொதுச் செயலாளராக யூ.கே. காலித்தீன், பொருளாளராக ஏ.எச்.எம். முபின், உப தலைவர்களாக என்.எம். ஜெமின், ஏ.எம்.சப்கி, பிரதி தலைவர்களாக ஏ.எல். நியாஸ் ஹாஜி, எம்.சி.எம். ரிலா, உப செயலாளராக எல். நாசர், கணக்கு பரிசோதகராக எச்.எம் அமான் ஹாஜி ஆகியோரோடு, எம்.எம். ஹம்ஸா, ஐ.எல். இக்பால், எம்.ஏ.எம். அனஸ், என்.எம். சிராஜ், மற்றும் எம்.பஸ்லுன் ஆகியோர் நடப்பாண்டுக்கான நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

சாய்ந்தமருது ஜம்மிய்யத்துல் உலமாவின் செயலாளர் நப்றாஸ் ஹனிபா (ரஹ்மானி), உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் கலந்து கொண்டமையும் சிறப்பம்சமாகும்.

## கொழும்பு மாநகர சபை ஐ.ச.கூட்டமைப்பின் வண்ணாத்திச் சின்ன உறுப்பினர் ராஜினாமா செய்தார்



2025 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, வண்ணாத்தி சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட ஜவ்பர் தனது கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததற்கான கடிதத்தை உத்தியோகபூர்வமாக கொழும்பு மாநகர சபை மேயரிடம் கையளித்தார்.

மேலும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஒவ்வொரு முறையும் அதிகப்படியான வாக்குகளை பெற்றவர்களுக்கு சுழற்சி முறை அடிப்படையில் மாநகர சபை உரிப்பு உரிமை பதவியினை வழங்குவதனை கொள்கையை வழக்கமாக கொண்ட ஒரு கட்சி.

அந்த அடிப்படையிலேயே தங்களுடைய கொள்கையையும், உறுப்பினர்களுக்கு அளித்த வாக்குறுதியினையும் நிறை வேற்றும் முகமாக முன்கூட்டியே இன்று உறுப்பினர் பதவியினை ராஜினாமா செய்ததுடன் அடுத்து அதிகப்படியான வாக்குகளை பெற்ற புதியதொரு உறுப்பினராக கொழும்பு வாழைத் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர் பந்துள ரனவீர அடுத்து வருகின்ற ஒரு வருடத்திற்கு சேவையாற்று வதற்கு பதவியேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இடிந்து விழும் நிலையில் மாத்தளை இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலயம்




**(எம்.எஸ்.எம். மஸாஹிம்)**

91 வருடம் பழைமை வாய்ந்ததும் மாத்தளை மாநகர முதல் முஸ்லிம் பாடசாலையுமான மாத்தளை இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலயம் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருப்பதாகவும் இதனால் உயிராபத்துக்கள் ஏற்படலாம் எனவும் பெற்றார்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

1935 ஆம் ஆண்டு மாத்தளை மாநகரில் ஆரம்பிக்கப்பாட்ட மேற்படி பாடசாலை மாத்தளை மாநகர முதல் முஸ்லிம் பாடசாலை யாகும். 91 வருடங்கள் பழைமை வாய்ந்த மேற்படி பாடசாலை இதுவரை எதுவித அபிவிருத்தி பணிகளோ புனரமைப்பு பணிகளோ இடம்பெறாத நிலையில் தற்போது இம்மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சீரற்ற காலநிலை காரணமாக இக்கட்டடம் எந்த சந்தர்ப்பத்திலும் இடிந்து விழும் அபாய நிலையில் இருக்கும் இக்கட்டடம் பாடசாலை நேரங்களில் ,டிந்து விழுந்தால் உயிராபத்துக்கள் ஏற்படலாம் எனவும் பெற்றார்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

29 பேர்சர்ஸ் காணிக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இப் பாடசாலை மாத்தளை பிரதான வீதிக்கும் மாத்தளை கொங்காவெல வீதிக்கும் இடையில் எவ்வித சூழல் பாதுகாப்பு அற்ற நிலையில் அமைந்துள்ளது என்பது குறிப்படத்தக்கது.

அதிபருடன் 24 ஆசான்கள் பணி புரியும் இப்பாடசாலையில் 250ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதோடு க.பொ.த சா/த வகுப்பு வரையிலான வகுப்புகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத் தக்கதாகும். இப்பாடசாலையின் கட்டடங்களை புணரமைத்து பாடசாலை மாணவர்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கும் பெற்றார்கள் மாத்தளை கல்வி பணியகத்தின் முஸ்லிம்பாடசாலை களுக்கு பொறுப்பான அதிகாரிகளோ மத்திய மாகாண முஸ்லிம் கல்வி பணியகமோ இதுவரை இதுபற்றிக் கண்டுகொள்ளாமல் இருப்பது வேடிக்கை எனவும் பெற்றார்கள் தெரிவிக்கின்றனர்.

சுதந்திரத்திற்கு பின் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தல் காலங்களின் போதும் இப்பாடசாலை துரித அபிவிருத்தி செய்யப்படும் என அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் முழங்கி கொட்டினாலும் தேர்தலுக்கு பின்னர் இவை யாவும் புஸ்வானமாய் மாறிவிட்டதாக தெரிவிக்கும் பெற்றார்கள் மத்திய மாகாண ஆளுநரும் மாகாண கல்வி திணைக் களமும் மத்திய மாகாண முஸ்லிம் கல்வி பிரிவும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பெற்றார்கள் தெரிவிக்கின்றனர்.

# கொழும்பில் நடைபெற்ற International Diplomats அமைப்பின் நான்காவது மாதிரி ஐக்கிய நாடுகள் சபை (MUN) மாநாடு


























International Diplomats அமைப்பின் நான்காவது மாதிரி ஐக்கிய நாடுகள் சபை (MUN) மாநாடு கொழும்பில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இன்டர்நேஷனல் டிப்ளோமட்ஸ் (International Diplomats) அமைப்பின் நான்காவது மாதிரி ஐக்கிய நாடுகள் சபை (MUN) மாநாடு 2026 பிப்ரவரி 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கொழும்பில் வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் இலங்கை மற்றும் 10க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 இளைஞர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். . ”செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் சமாதானம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை கட்டமைத்தல்” என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்த மாநாடு, கட்டமைக்கப்பட்ட மாதிரி ஐக்கிய நாடுகளின் குழு முறைமையில் ராஜதந்திரம், உலகளாவிய கொள்கை ரீதியான உரையாடல் மற்றும் பொறுப்பான யுஐ ஆளுமைக்கான உயர் மட்ட தளத்தை வழங்கியது.

இலங்கையின் முன்னாள் நீதி, நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் கௌரவ அலி சப்ரி, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாநாட்டின் முதலாம் நாள் இராஜதந்திர இரவை (Diplomatic Night) சிறப்பித்தார். இலங்கைக்கான நேபாள தூதர் கௌரவ டாக்டர் பூர்ணா பகதூர் நேபாளி அவர்கள் சிறப்பு பேச்சாளராகக் கலந்து கொண்டார். மேலும், ருஏே இலங்கை நாட்டு ஒருங்கிணைப்பாளர் திருமதி சர்மாலி ஜெயசிங்க அவர்கள் சிறப்புரையாற்றினார். கௌரவ விருந்தினர்களாக இலங்கைக்கான இந்தோனேசியக் குடியரசின் தூதுவர் மேன்மைமிகு தேவி குஸ்டினா டோபிங், இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் ஆலோசகரும் துணைத் தலைவருமான திரு. இவான் ராட்ஜென்ஸ் மற்றும் இலங்கையில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தின் துணைத் தலைவர் திரு. ஆலிவர் பிராஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக மூத்த பத்திரிகையாளர் திரு. என். எம். அமீன் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய அதிதிகள் கலந்து கொண்டனர். செயற்கை நுண்ணறிவு (AI), அமைதி கட்டமைத்தல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை குறித்த கருப்பொருள் இராஜதந்திர குழு விவாதமும் நடத்தப்பட்டது.

இரண்டாவது நாளில் மாதிரி ஐக்கிய நாடுகள் சபை குழு அமர்வுகளும் முறையான இராஜதந்திர செயற்பாடுகளும் இடம்பெற்றன. மூன்றாவது நாளில், சர்வதேச பிரதிநிதிகள் இலங்கை பாராளுமன்றத்தை கண்டறிந்தது மட்டுமின்றி கொழும்பு நகர சுற்றுப்பயணத்திலும் இணைந்தனர். சுற்றுப்பயணம் முழுவதும் அனைத்து பிரதிநிதிகளுக்கும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. மேலும், பார்வையிட்ட ஒவ்வொரு இடத்தின் முக்கியத்துவம் குறித்தும் அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இன்டர்நேஷனல் டிப்ளோமட்ஸ் அமைப்பு 2023 இல் நிறுவப்பட்டது. அதன் முதல் மாநாடு இந்தியாவின் புது தில்லியில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இந்தியாவின் கோவா மற்றும் தாய்லாந்தின் பாங்காக்கில் மாநாடுகள் நடைபெற்றன. இந்த அமைப்பின் அடுத்த சர்வதேச மாநாடு 2026 மே மாதத்தில் துபாயில் நடைபெற உள்ளது.

இன்டர்நேஷனல் டிப்ளோமட்ஸ் அமைப்பானது திரு. சல்மான் காசி தி டிராப்ஸி (The Dropsy) நிறுவனத்தின் தலைவரால் நிறுவப்பட்டது. இவர் இவ்வமைப்பின் ஸ்தாபகராகவும் இயக்குனராகவும் செயல்படுகிறார். மேலும் இளைஞர் பாராளுமன்றத்தின் முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சர் திரு. அஹ்மத் சாதிக் இவ் அமைப்பின் தலைவராக செயல்படுகிறார்.

அத்தோட மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாடு ,பொதுச் செயலாளரும் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞருமான திரு. சமக சமரக்கோன் அவர்களால் இயக்கப்பட்டது.

மேலும் அனைத்து விதமான ஒருங்கிணைப்பு செயல்பாடுகள்,இளைஞர் பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் இவ்வமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் திரு. முப்தி முயீன் அவர்களால் கையாளப்பட்டது. எதிர்வரும் மே மாதம் ஐந்தாவது சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாடு துபாயில் நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புனித ரமலான் காலத்தில் சவூதியின் நன்கொடைகள்




ரமலான் மனிதநேயத்தின் உலகளாவிய பாலமாகும். அதன் அடிப்படையில் சவுதி அரசாங்கத்தின் நன்கொடைகளும் இலங்கை வாழ் மக்களுக்கு வழங்கப்படும் நிகழ்வுகள் சவுதி அரேபிய தூதரக்தில் தூதுவர் ஹாலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் நடைபெற்றது.

புனித ரமலான் மாதம் மனித நேயத்தையும், பகிர்வையும், சகோதரத்துவத்தையும் உலகம் முழுவதும் நினைவூட்டும் அருள்மிகு காலமாகும். இந்த நற்பண்புகளின் சின்னமாக, சவுதி அரேபியா தனது அரசாங்கத்தின் மூலம் உலக முஸ்லிம் நாடுகளுக்குப் பரந்த அளவில் நன்கொடைகளை வழங்கி வருகிறது.

ரமலான் மாதம் தொடங்கும் வேளையில், உணவு பொருட்கள், பேரீச்சம்பழங்கள், இஃப்தார் உணவுத் தொகுப்புகள், மருத்துவ உதவிகள், அவசர நிவாரணப் பொருட்கள் போன்றவை பல நாடுகளுக்குத் தக்க முறையில் அனுப்பப் படுகின்றன. போர், வறுமை, இயற்கை பேரிடர்கள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் மக்களுக்காக இந்த உதவிகள் நம்பிக்கையின் ஒளியாக விளங்குகின்றன.

இந்த நன்கொடைகள் வெறும் பொருள் உதவியாக மட்டும் அல்ல அது மனிதர்களின் உள்ளங்களில் நம்பிக்கையையும், உறுதியையும் விதைக்கும் ஒரு கருணையின் செய்தியாகும். “உலகம் ஒரே குடும்பம்” என்ற உணர்வை வலுப்படுத்தும் வகையில், இன, மொழி, தேச எல்லைகளைத் தாண்டி சவுதி அரசாங்கம் தனது பொறுப்புணர்வை நிறை வேற்றுகிறது.

மேலும், இந்த உதவித் திட்டங்கள் சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து திட்டமிடப்பட்டு, வெளிப்படைத்தன்மை மற்றும் பயன்தன்மை உறுதி செய்யப்படும் விதத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் உதவி பெறுவோர் நேர்மையாகவும் மரியாதையுடனும் ஆதரவைப் பெறுகின்றனர்.






ரமலான் மாதத்தின் உண்மையான ஆவியை உலகிற்கு எடுத்துச் செல்லும் இந்த முயற்சிகள், இஸ்லாமிய மதத்தின் கருணை, தியாகம், அன்பு ஆகிய அடிப்படை மதிப்புகளை நடைமுறையில் காட்டுகின்றன. மனிதநேயத்தின் இந்த ஒளி உலகம் முழுவதும் பரவி, அமைதியும் சகோதரத்துவமும் நிலைபெறட்டும் என்பதே அனைவரின் பிரார்த்தனையாகும்.

**இம்ரான் ஜமால்தீன்**
**உலக முஸ்லிம் லீக் (ராபிதா)**
**இலங்கைகான பிரதிநிதி.**


## வாசிப்பீராக! 40



**பிஸ்தாமி அஹமத்**

# வாசிப்பும் வளவாளர்களும்

இன்று வளங்கள் குறித்து மிக அதிகமாக விரிவாக பேசப்படுகின்றது. குறிப்பாக மனித வளங்கள் ஏனைய பௌதீக வளங்கள் பெற்றிறாத சிறப்பையும் முதன்மை இடத்தையும் பெற்று வருகின்றது. அனைத்தையும் விட மனித வளங்கள் தான் இன்று மிகப்பெரும் முதலீடாக மூலதனமாக மாறி இருக்கின்றது. Human capital மனிதர்கள்தான் உலகின் வளங்கள். எல்லாப் பௌதீக வளங்களும் மனித வளங்களால் தான் உருவாக்கப்படுகின்றன. மனிதன் என்று சொல்கின்ற பொழுது அவனுக்கு உடல் அறிவு ஆன்மா என்ற மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. இதில் முக்கியமான ஒன்றுதான் அறிவு. அறிவை எப்பொழுதும் நாங்கள் இற்றைப் படுத்திக் கொள்வதற்காக ரினயவந யனெ ரிபசயனந வாசிக்க வேண்டும். எந்தெந்தத் துறைகளோடு நாங்கள் சம்பந்தப்படுகின்றோமோ தொடர்பு படுகின்றோமோ தொடராக இயங்கி வருகின்றோமோ அந்தந்தத் துறைகளோடு எமக்கு ஆழமான அகன்ற அறிவுப் பின்புலம் இருக்க வேண்டும். அந்தந்தத் துறைகளில் ஏற்படுகின்ற அறிவுப்பாய்ச்சல் மேம்பாடு முன்னேற்றம் மாற்றம் புதிய போக்குகள் செல் நெறிகள் குறித்தெல்லாம் நாம் மிகுந்த அவதானத்தோடும் ஈடுபாட்டோடும் இருந்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் துறை சார்ந்தவர்களால் தூக்கி வீசப்படுவோம் என்று பெரும்பாலும் மனித வளங்கள் எல்லா நிகழ்வுகளுக்கும் போல ஊக்குவிப்பு பேச்சாளர்களாக motivational speech அழைக்கப் படுகின்றமையை நாங்கள் அவதானிக்கின்றோம் இத்துப்போன சூழ்ந்து போன பழைய கோட்பாடுகளை கருத்துக்களை முன்வைக்கின்ற பொழுது அவை எடுபடாது. எனவே எங்களுடைய கருத்துக்களும் சிந்தனைகளும் எடுபட வேண்டுமாக இருந்தால் சமூகத்திலே தாக்கம் செலுத்த வேண்டுமாக இருந்தால் செல்வாக்குச் செலுத்த வேண்டுமாக இருந்தால் எங்களுடைய கருத்துக்கள் செயலலூக்கம் மிக்கதாக அமைய வேண்டுமாக இருந்தால் அது அமுலாக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் முன்வைக்கின்ற ஒவ்வொரு கருத்தும் அது பேச்சுக்கூடாக எழுத்துக்கூடாக எப்படியும் அமையலாம். அவை இற்றைப் படுத்தப்பட்டதாக புத்தம் புதிய கருத்துக்களாக நவீன உலகு விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக அமைய வேண்டும். அப்படி அமைகின்ற பொழுது மாத்திரம் தான் நாம் மிகத் தரமான மனித வளங்களாக அடையாளப்படுத்தப்படுவோம். சமூகத்தால் எமக்கான அங்கீகாரம் தரப்படும். எமது கருத்துக்களுக்கும் சிந்தனைகளுக்கும் பெறுமதி கிடைக்கும். அப்படி இல்லாத பட்சத்தில் எம்முடைய கருத்துக்கள் காலாவதியான கருத்துக் களாக செயலலூக்கம் குன்றிய கருத்துக்களாக செயல்பாட்டுக்கு உதவாத கருத்துக்களாக செல்வாக்கிழந்த செல்லாக்காசான கருத்துக்களாக மாறும். எல்லோருக்கும் போல வாசிப்பு தேவைப் படுகின்றது. அவசியப்படுகின்றது. இத்தகைய மனித வளங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றவர்களுக்கு இது அத்தியாவசியமான தேவையாக இருக்கின்றது. அறிவை நாங்கள் இற்றைப்படுத்த வேண்டும். அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைவதோடு மறுபக்கம் பழைய கருத்துக்கள் பெறுமானமிழந்து கிடப்பில் வீசப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் எம்மை நாம் இற்றைப் படுத்திக் கொள்கின்ற பொழுது தான் புத்தாக்க சிந்தனைகளை முன்வைக்க முடியும். புத்தாக்கம் புதிய சிந்தனை போன்றன இன்று உலகம் விரும்பி ஏற்றுக் கொள்கின்ற எதிர்பார்க்கின்ற ஒரு



விடயமாக இருக்கின்றது எந்தளவு தூரம் நாம் வாசிப்பை வளமும் செறிவும் மிக்கதாக அமைத்துக் கொள்கின்றோமோ அந்த அளவு கருத்துக்களே சமூகத்துக்கு மத்தியில் முன் வைக்க முடியும். வாசிப்புத்தான் எம்முடைய கருத்துக்களை வளமாக்குவது போலவே எம்முடைய கருத்துக்களை உள்வாங்கக் கூடியவர்களது சிந்தனை தளத்தையும் விரிவுபடுத்தி விடும் அவர்களும் குருட்டுத்தனமாக எதையும் நம்பி ஏற்றுக்கொண்டு உடன்படாமல் இந்த நூற்றாண்டின் திறமைகள் ஒன்றாக 21ளவ உநவெரசல ளமடைடள காணப்படக்கூடிய critical thinking analysis போன்றவற்றுக்கு ஏற்ப கருத்துக்களை அலசி ஒப்பிட்டாய்ந்து சந்தர்ப்பத்துக்கு பொருத்தமானவற்றை தெரிவு செய்யக்கூடியவர்களாக மாறுவார்கள்.

# ஈரானை சுற்றி வளைத்தும் தாக்குதல் நடாத்த தயங்கும் அமெரிக்கா

எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)




ஈரான் அமெரிக்கா போர் தற்போது மிகப் பெரிய அளவிலான கொதி நிலையை ஏற்படுத்தும் வகையில், எந்த நேரத்திலும் போர் வெடிக்கும் என்று கூறப்படுகிறது. இதற்கிடையே இந்த போரை நடத்தி வெற்றி பெற வேண்டும் என்றும் அதே நேரத்தில் ஈரான் என்ற ஒரு தேசம் இல்லாமல் ஆக்கிவிட இஸ்ரேல் துடியாய் துடித்து கொண்டு வரும் நிலையில் தற்போது போர் தவிர்க்க முடியாத ஒன்றாக உருவாகி வருகிறது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

இதற்கிடையே ஈரான் இராணுவத் துறை தளபதி அலி லாரிஜானி அல் ஜசீராவிடம், வாஷிங்டனால் குறிப்பிட்ட முன்மொழிவு எதுவும் அனுப்பப்பட வில்லை என்றாலும், அணுசக்தி பிரச்சினையில் இரு தரப்பினருக்கும் இடையே பொதுவான அடிப்படை இருப்பதாக ஈரான் நம்புகிறது என்று கூறுகிறார். ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்புக் குழுவின் செயலாளர் தோஹாவில் கத்தார் மற்றும் ஹமாஸ் அதிகாரிகளுடன் புதிய சந்திப்புகளை நடத்தி வருகிறார். இருந்த போதிலும் இதுவரை எந்தவொரு முடிவும் எட்டப்படாத நிலையில் உலகின் பெரும்பாலான பகுதிகளில் பதட்டம் நிலவுகிறது என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் ஈரான் அரச துறை தலைவர் அல் ஜசீரா ஊடகத்தில் கருத்து தெரிவித்ததன்படி, வாஷிங்டனுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நடத்த முயற்சிக்கின்றன் அவை குறித்த எங்கள் நிலைப்பாடு சாதகமானது வாஷிங்டனில் இருந்து ஒரு குறிப்பிட்ட முன்மொழிவை நாங்கள் பெறவில்லை

அணுசக்தி தொழில்நுட்பத்தை எங்களுக்கு யாரும் வழங்கவில்லை நாங்கள் அதை எங்கள் சொந்த உள்ளூர் முயற்சிகள் மூலம் அடைந்தோம் என்று ஈரான் தெளிவாக கூறி விட்டது.

ஈரானுக்கு இராணுவ விருப்பத்தைத் தவிர வேறு அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று வாஷிங்டன் முடிவு செய்துள்ளது.

த்தும் ஒரு மத்திய கிழக்கு நாடு மற்றும் 12 நாள் ஈரான்-இஸ்ரேல் போரின் போது ரு.எஸ். ஈரானிய அணுசக்தி தளங்களை குண்டுவீசிய பின்னர் ஜூன் மாதம் ஈரான் தாக்கியது. பாரசீக வளைகுடாவில் ஒரு பெரிய கடல் இயற்கை எரிவாயு வயலைப் பக-



அயதுல்லா கொய்மெய்னி மற்றும் வெளிவிவகார துறை அமைச்சர் அப்பாஸ் அராகாசி தெளிவாக தெரியப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் எந்தவொரு நிலையிலும் ஈரான் அணு ஆயுத திட்டத்தை கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். அதேநேரத்தில் அணு ஆயுத கப்பல்களை நிறுத்தி எங்களை மிரட்ட முடியாது என்று அப்பாஸ் அராகாசி தெளிவாக தெரிவித்து உள்ளார். மிரட்டல் மற்றும் உருட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை என ஈரான் உறுதியாக தெரியப்படுத்தி விட்டது.

தற்போதைய நிலையில் சீனா செய்மதி மூலம் அமெரிக்கா கடற்படை கப்பல்களை முற்றிலுமாக கண்காணிப்பு செய்து ஈரான் இராணுவ தலைமைக்கு துல்லியமான முறையில் செய்திகளை தொடர்ந்து அனுப்பி வரும் நிலையில் ரஷ்யா இன்று 747 போயிங் விமானம் மூலம் ரகசிய ஆயுதங்களை தெஹ்ரானில் இறக்கிய நிலையில் ஈரான் போருக்கு தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் மத்திய கிழக்கில் அமெரிக்கா இராணுவ தளங்களை ஈரான் குறிவைத்து ஏராளமான பாலி ஸ்டிக் ஏவுகணை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கும் நிலையில் அரபு நாடுகள் கூட்டமைப்பு முடிந்தளவு போரை தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்கா விடம் போராடி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஒரு வேளை போர் தொடங்கினால் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா ராணுவ நிலைகள் முழுமையாக அழிக்கப்படும் ஆபத்து உள்ளது. அதனைத் தொடர்ந்து ஹெர்மூஸ் பகுதியில் தினமும் 2 கோடிக்கும் மேற்பட்ட கச்சா எண்ணெய் பேரல்கள் தினமும் சென்று வரும் நிலையில் அந்த பிராந்தியத்தில் வரும் கப்பல்களை தாக்கி அழிக்கும் வகையில் ஈரான் திட்டம் தீட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அப்படி நடைபெறும் பட்சத்தில் உலகின் எண்ணெய் வர்த்தகம் 25 சதவீதம் பாதிக்கப்படுவதோடு உலகின் பல்வேறு நாடுகளில் பொருளாதார மந்தநிலை ஏற்பட காரணமாக அமைந்து விட அதிகமாக வாய்ப்பு உள்ளது.

எனவே தான் சவூதி அரேபியா எண்ணெய் வர்த்தகம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் இயற்கை எரிவாயு முற்றிலுமாக பாதிக்கப்படும் நிலையில் அமெரிக்கா ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இன்று வரையிலும் அமெரிக்கா உலகின் மிகப்பெரிய இராணுவ சக்கரவர்த்தி என்கிற இடத்தில் இருந்தாலும் பத்துக்கும் மேற்பட்ட ராணுவ நாசகார கப்பல்களை பாரசீக வளைகுடா பகுதியில் கொண்டு நிறுத்திய பிறகும் தாக்குதல் நடத்த தயக்கம் காட்டி வருவதாக கூறப்படுகிறது.

ஈரான் என்ற நாட்டின் மீது கை வைப்பது மிகப் பெரிய அளவிலான நீண்ட கால பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான போராக மாறி விடக்கூடும் என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் தான் தயக்கம் காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதியாக என்ன நடைபெறும் என்பதை நாம் யாரும் கணித்தது கூற முடியாத நிலையில் தான் போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டு இருக்கும் நிலையில் அடுத்த கட்ட போர் ஆபத்து எந்த வடிவத்தில் மாறும் என்பதை யாராலும் யூகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

ிர்ந்து கொள்ளும் ஈரானுடன் கடந்த காலங்களில் கத்தார் ஒரு முக்கிய பேச்சுவார்த்தையாளராக இருந்து வருகிறது.

ஆளும் அமீரான ஷேக் தமீம் பின் ஹமாத் அல் தானி, “பிராந்தியத்தின் தற்போதைய நிலைமை மற்றும் பிராந்திய பாதுகாப்பு மற்றும் அமைதி வலுப்படுத்துவதை

நாம் உறுதி செய்ய வேண்டும், இது பெரும்பாலும் அமெரிக்காவைப் பொறுத்தது”. அந்த கவலை இருந்தபோதிலும், முன்னாள் U.S. ஜனாதிபதி பராக் ஒபாமா பதவியில் இருந்தபோது உலக வல்லரசுகளுடன் ஈரான் எட்டிய 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை குறிப்பிட்டு, “ஒபாமாவை விட ஒரு சிறந்த ஒப்பந்தத்திற்கு வர முடியும்” என்று அராச்சி கூறினார். ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் ஒருதலைப்பட்சமாக அமெரிக்காவை இந்த ஒப்பந்தத்திலிருந்து விலக்கிக் கொண்டார்.

மத்திய கிழக்கிற்கு மற்றொரு விமானத்தை அனுப்ப டிரம்ப் பரிந்துரை U.S. விமானம் தாங்கி USS ஆபிரகாம் லிங்கன், கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை மத்திய கிழக்கிற்கு நகர்த்தியுள்ளது. இது ஈரானை ஒரு ஒப்பந்தத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், ட்ரம்ப் அவ்வாறு செய்ய விரும்பினால் இஸ்லாமிய குடியரசைத் தாக்க தேவையான துப்பாக்கி

ஜார்ஜ் H.W. புஷ் வர்ஜீனியாவின் நோர்போக்கில் இருந்து புறப்பட்டதாக U.S. Navy Institute News தெரிவிக்கிறது. வெனிசுலா தலைவர் நிக்கோலஸ் மதுரோவை கைப்பற்றிய U.S. இராணுவத் தாக்குதலுக்குப் பின்னர் USS ஜெரால்ட் ஆர். ஃபோர்ட் கரீபியனில் உள்ளது.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் சர்வதேச நாடுகள் மத்தியில் போர் அபாயத்தை தூண்டும் வகையில் நடவடிக்கைகள் அமைந்துள்ளது என்று ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் ஈரான் உடன் போரைத் தொடங்கினால் மிகப் பெரிய அளவிலான பின்னடைவை சந்திக்கும் என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு அஞ்சுவதாக ஒரு செய்தி. மற்றொரு செய்தி அமெரிக்கா ஈரான் உடன் போர் செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக இரண்டு நிலை செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பொருத்தமான மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் போர் அபாயத்தை தவிர்க்க அதாவது பேச்சுவார்த்தை நடத்தி தீர்வை எட்ட பாடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.



அமெரிக்கா அணு ஆயுத நிலைகளை மட்டுமே பேசும் உரிமை உள்ளதை தவிர மற்ற விடயங்கள் குறித்து அமெரிக்க தலையீடு செய்வதை நாம் ஒரு போதும் இணங்க போவதில்லை என ஈரான் தெளிவாக கோடிட்டுக் காட்ட தவறவில்லை என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதன் மூலம் அமெரிக்கா ஒரு பகுத்தறிவு பாதையை நோக்கி நகர்ந்துள்ளது.

அணுசக்தி திட்டத்தை தவிர வேறு எந்தப் பிரச்சினையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறாது என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராகாசி தெளிவாக கூறி இருக்கிறார். மூத்த ஈரானிய பாதுகாப்பு அதிகாரி அலி லாரிஜானி ஓமானை விட்டு கத்தாருக்கு புறப்பட்டார். இது ஒரு பெரிய ரு.எஸ். இராணுவ நிறுவலை நட-

நோக்கமாகக் கொண்ட “சர்வதேச முயற்சிகள்” குறித்து டிரம்புடன் பேசியதாக அதன் அரசு நடத்தும் கத்தார் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ரஷ்ய அரசு சேனலான ஆர்டி-யிடம் பேசிய ஈரானிய வெளியுறவு மந்திரி அப்பாஸ் அராச்சி, “தெஹ்ரானுக்கு இன்னும் அமெரிக்கர்கள் மீது முழு நம்பிக்கை இல்லை” என்றார். “கடந்த முறை நாங்கள் பேச்சுவார்த்தை நடத்திய போது, கடந்த ஜூன் மாதம் நாங்கள் பேச்சுவார்த்தையின் நடுவில் இருந்தோம், பின்னர் அவர்கள் எங்களை தாக்க முடிவு செய்தனர், அது எங்களுக்கு மிகவும் மோசமான அனுபவமாக இருந்தது” என்று ஈரானின் உயர்மட்ட இராஜ தந்திரி கூறினார். “அந்த சூழ்நிலை மீண்டும் நிகழாமல் இருப்பதை

சக்தியைத் தான் கொண்டிருப்பதை காட்டுவதற்குமான முயற்சியாக தெரிகிறது. ஏற்கனவே, U.S. படைகள் லிங்கனுக்கு மிக அருகில் வந்ததாகக் கூறிய ஒரு ட்ரோனை சுட்டு வீழ்த்தியுள்ளன. மேலும் பாரசீக வளைகுடாவின் குறுகிய வாயிலான ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரானியப் படைகள் நிறுத்த முயன்ற ஒரு ரு.எஸ்.-கொடியிடப்பட்ட கப்பலின் உதவிக்கு வந்தன. பிராந்தியத்திற்கு இரண்டாவது கேரியரை அனுப்புவது குறித்து பரிசீலித்து வருவதாகவும், “எங்களிடம் ஒரு ஆர்மடா உள்ளது, அது அங்கு செல்கிறது, மற்றொன்று போகக்கூடும்” என்றும் ட்ரம்ப் செய்தி வலைத்தளமான ஆக்ஸியோஸிடம் கூறினார். எந்த கேரியர் செல்ல முடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. USS

அமெரிக்கா ஈரான் மீதான தாக்குதலுக்கு அச்சம் தெரிவித்து வரும் நிலையில் இது ஒரு பிராந்திய நிலை போராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை சர்வதேச நாடுகள் மிகவும் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா வை பொருத்தமான மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் போர் அபாயத்தை தவிர்க்க அதாவது பேச்சுவார்த்தை நடத்தி தீர்வை எட்ட பாடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

அதேநேரத்தில் ஈரான் அணு ஆயுத நிலைகளை கைவிட வேண்டும் என்று அமெரிக்கா உறுதியாக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நாங்கள் போருக்கு தயாராக இருப்பதாக ஈரான் தலைவர்

# 6ஆவது தெற்காசிய ஸெபக்தக்ரோ சம்பியன்ஷிப் இலங்கைகாய் பதக்கம் வென்ற அல் அமான் மாணவன் மொஹமட் நாசர்

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற 6ஆவது தெற்காசிய ஸெபக்தக்ரோ சம்பியன்ஷிப் போட்டியில், இலங்கை அணி வரலாற்றில் முதன்முறையாக டீம் ரெகூ (Team Regu) பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

மேலும், மெயின் ரெகூ (Main Regu) மற்றும் க்வாட் (Quad) பிரிவுகளில் இரண்டாம் ரன்னர்ஸ்- அப் (மூன்றாம் இடம்) நிலையை பெற்றது.

இத் தொடரில் பாகிஸ்தான், இந்தியா போன்ற முன்னனி நாடுகளின் அணிகள் இத் தொடரில் பங்கேற்றிருந்தன.

இவ்வாறான சிறப்பான போட்டியை நாட்டில் சிறப்பாக நடத்தி இவ்விளையாட்டினை இலங்கை முழுவதும் கொண்டு செல்ல வைத்தமைக்காக இக் கூட்டமைப்பிற்கு (Federation) மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அத்துடன் இப் போட்டித் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி





பங்கேற்ற மினுவன்கொட கல்லொளுவ அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவன் மொஹமட் நசீர் மொஹமட் நாசருக்கு பாடசாலை சமூகமும், ஊர் மக்களும் தமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

# இலங்கை மற்றும் பாகிஸ்தான் இடையிலான விளையாட்டு இராஜதந்திர உறவுகள் பலப்படுத்தப்பட்டன



**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

2026 டி20 உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானின் மத்திய உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (PCB) மற்றும் ஆசிய கிரிக்கெட் பேரவையின் தலைவருமான சையத் மொஹ்சின் ரசா நக்வி தலைமையிலான உயர்மட்ட இராஜதந்திரக் குழுவினர், இலங்கையின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே அவர்களைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் விளையாட்டுத் துறை பணிப்பாளர் நாயகம் எஸ். அச்சுதன் அவர்களும் கலந்துகொண்டார்.

இலங்கையில் நடைபெற்ற தீர்மானமிக்க இந்தியா - பாகிஸ்தான் உலகக் கிண்ணப் போட்டிக்கு வழங்கப்பட்ட சிறந்த விருந்தோம்பல் மற்றும் பொருத்தமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும்



கிரிக்கெட் சபை சார்பாக இலங்கை ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க மற்றும் அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோருக்கு பாகிஸ்தான் அமைச்சர் தனது விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான விளையாட்டு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு இந்தச் சந்திப்பு ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) பஹீம் உல் அஸீஸ், அமைச்சர் சௌத்ரி சாலிக் ஹூசைன், PCB தலைவரின் விசேட ஆலோசகர் அமீர் மிர், PCB செயற்பாட்டு அதிகாரி சுமைர் அகமது சையத், மொஹமட் சல்மான் லியாகத், பிரதித் தூதுவர் சுனைரா லத்தீப் மற்றும் PSL தலைமை நிர்வாக அதிகாரி சல்மான் நசீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரு நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட பரிமாற்றத் திட்டங்களை ஆரம்பிப்பது குறித்தும், விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் எதிர்கால விளையாட்டுத் திட்டங்களுக்குத் தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கஹட்டோவிட்ட முஅஸ்கருர் ரஹ்மானில் விளையாட்டு போட்டி பரிசளிப்பு நிகழ்வு

கஹட்டோவிட்ட முஅஸ்கருர் ரஹ்மான் மகளிர் அரபுக் கல்லூரியின் (Muaskar Rahman Ladies Arabic College) வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா கடந்த பெப்ரவரி 16 திங்கட்கிழமை அன்று கஹட்டோவிட்ட திவானி வரவேற்பு மண்டபத்தில் (Diwani Reception Hall) மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அல் ஆலிமா முஷ்பிகா முஅஸ்கரிய்யா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவிகளின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இந்த விழாவிற்கு பிரதம அதிதியாக ஏசியன் குரூப் நிறுவனத்தின் (Asian Group of Company) அல் ஹாஜ்ஜா ஷிஹானா ஹாஜா ஹூசைன் கலந்து சிறப்பித்தார். அத்துடன் திஹாரிய தருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலையின் பிரதி அதிபர் ஷனாஸ் முஹம்மது அவர்கள் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மேலும், கௌரவ அதிதிகளாக பின்வருவோர் கலந்துகொண்டனர்:





ஆ.டீ.கு. ஸலீஹா (பிரதி அதிபர், கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம்)

ரயீஸா ரஸ்ஸாக் (பிரதி அதிபர், பூகொடை குமாரமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம்)

ஆ.வு.யு. மர்லியா (பிரதி அதிபர், உடுகொட அரபா மகா வித்தியாலயம்)

மூன்று இல்லங்களுக்கு இடையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் 347 புள்ளிகளைப் பெற்று மிஸ்குல் ஜன்னா இல்லத்தினர் 2026 இன் சாம்பியன் இல்லத்திற்கான கிண்ணத்தை வென்றனர் .

322 புள்ளிகளைப் பெற்ற அரபுல் ஜன்னா இல்லத்தினர் இரண்டாவது இடத்தையும், 308 புள்ளிகளைப் பெற்ற தீபுல் ஜன்னா இல்லத்தினர் மூன்றாவது இடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகளின் இறுதியில் இல்லங்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகள் விருந்தினர்களால் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் முகாமைத்துவ சபை, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வு, “பெண்களுக்கு மாத்திரம்” (Ladies Only) என்ற வரையறைக்கு உட்பட்டு மிகவும் கண்ணியமான முறையில் நடைபெற்றது.

போட்டிகளை எழுத்தாளரும் நூலாசிரியருமான பயாஸா பாஸில் தொகுத்து வழங்கினார்.

# பேருவளைபாஸியதுன் நஸ்ரியா அஹதிய்யாவில் பரிசளிப்பும் ரமழான் வரவேற்பும்











**(பேருவளை பீ.எம் முக்தார்)**

பேருவலை, மருதானை அல்-பாஸியதுன் நஸ்ரியா அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், ரமலானை வரவேற்கும் நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அஹதியா பாடசாலை அதிபர் அஹமத் சுஹைர் (நளீமீ) இந்த வைபத்திற்கு தலைமை வகித்தார்.

இந்கிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை நகர பிதா மபாசிம் அசாஹிர் கலந்துகொண்டார்.

நகர சபை தலைவரினால் அஹதிய்யா பாடசாலைக்கு 78 பிலாஸ்டிக் கதிரைகளும் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விழாவில் களுத்துறை மாவட்ட அஹதியா சம்மேளன தலைவர் எம்.எச்.எம் உவைன் ஜே.பி, அஹதிய்யா சம்மேளன தேசிய அமைப்பாளர் அல் ஹாஜ் ஏ.எல். எம் அஸ்வர், சவுதி அரேபிய தூதரக முன்னாள் நிர்வாக அதிகாரி அஷ் ஷெய்க் எம்.எஸ்ஃஎம் நஸீர் (நளீமி) உட்பட பல பிரமுகர்கள் அஹதிய்யா பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் பங்கேற்றனர்.

மாணவர்களின் பல்வேறு இஸ்லாமிய கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மருதானை அஹதிய்யா மாணவர்களின் திறமைகளை பிரதம அதிதி பேருவளை நகர பிதா பெரிதும் பாராட்டினார்.

# 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம்

## நடந்தவைகளும், நடக்க இருப்பவைகளும்



அரபாத் பஹர்தீன்

10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் கடந்த 7 ஆம் திகதி முதல் ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது.
இத் தொடரில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்றிருக்க ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்கள் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் போட்டிகள் இடம்பெற்று இப்போது இன்று வரை பெரும்பாலான முதல் சுற்று லீக் போட்டிகள் முடிவுக்கு வந்துள்ளன. இம் முதல் சுற்றுப் போட்டிகளில் பல சிறப்புமிக்க தருணங்கள் பதிவாகியும் உள்ளன.

### இங்கிலாந்தை மிரட்டிப் பார்த்த நேபாளம்




குழு சீ இல் இடம்பெற்ற இங்கிலாந்து மற்றும் நேபாளம் அணிகள் கடந்த 8ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் 5ஆவது போட்டியில் மோதின. இதில் முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
பின்னர் 185 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணியின் துடுப்பாட வீரர்கள் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை வெளுத்துக் கட்டினர். ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வி நோக்கி நகர்ந்து கொண்டிருக்க இறுதி ஓவரில் 10 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவையாக இருக்க இங்கிலாந்து அணி சார்பில் சாம் கரன் சிறப்பான பந்தினை வீசி வெறும் 5 ஓட்டங்களை விட்டுக் கொடுக்க வெற்றிக்காகப் போராடிய நேபாளம் 180 ஓட்டங்களைப் பெற்று அணி 4 ஓட்டங்களால் தோற்றுப் போனது.




### ஹெட்ரில் சாதனை படைத்த மேற்கிந்திய வீரர் ரொமாரியோ செபேர்ட்

10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் முதல் நாளான 7 ஆம் திகதி இடம்பெற்ற 2 ஆவது லீக் போட்டியில் குழு சீ இல் இடம்பெற்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷ் அணிக்கு பதிலாக இம்முறை உலகக்கிண்ண தொடரில் இணைக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணியை எதிர்த்து விளையாடியது.
இப்போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயித்த வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஸ்கொட்லாந்து அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்க 17ஆவது ஓவரை மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளரான ரொமாரியோ செபேர்ட் வீசினார்.
இவ் ஓவரின் முதல் பந்தில் மெத்யூவ் குறுஸை ஆட்டமிழக்கச் செய்தார். பின்னர் 2ஆவது பந்தில் மெச்சில் லீச்சின் விக்கெட்டையும் கைப்பற்றினார்.
பின்னர் ஹெட்றிக் சாதனைக்காக பந்தை ஒலிவர் டேவிட்சனை நோக்கி வீச அவர் அந்தப் பந்தில் போல்ட் செய்யப்பட 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் முதல் ஹெட்றிக் சாதனையை படைத்து அசத்தினார் ரொமாரியோ செபேர்ட். மேலும் அப் போட்டியில் ரொமாரியோ செபேர்ட் 5 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 35 ஓட்டங்களால் அசத்தல் வெற்றி பெற்றது.

### ஓமானை பந்தாடிய இலங்கை



குழு பீ இல் அங்கம் வகிக்கும் உலகக் கிண்ண ஹோஸ்ட் நாடான இலங்கை அணி ஓமான் அணியை கடந்த 12ஆம் திகதி பல்லேகல சர்வ-தேச மைதானத்தில் எதிர்கொண்டது.
இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குசலம் மெண்டிஸ், பவன் ரத்நாயக்க மற்றும் தசுன் சானக்க ஆகியோரின் அதிரடி அரைச்சதங்களின் உதவியுடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
பின்னர் பதிலுக்கு இமாலய இலக்கை விரட்டிய ஓமான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து வெறும் 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள இலங்கை அணி 105 ஓட்டங்களால் மிகப் பெரிய வெற்றியைப் பதிவு செய்து அசத்தியது.

### முதல் வரலாற்று வெற்றியை பதிவு செய்த இத்தாலி

இவ் உலகக்கிண்ண தொடரின் முதல் முறையாக களம் கண்ட இத்தாலி அணி குழு பீ இல் இடம் பெற்றிருக்க மற்றைய அணியான நேபாளம் அணியை குழு நிலை லீக் ஆட்டத்தில் எதிர்கொண்டது.
இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 123 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
பின்னர் தொடர்ந்து 124 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இத்தாலி அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக சகோதரர்களான ஜஸ்டின் மொஸ்கா மற்றும் அந்தோனி மொஸ்கா ஆகியோர் களம் நுழைந்து தத்தமது அரைச் சதங்களை ஆட்டமிழக்காமல் பதிவு செய்து விக்கெட் இழப்பின்றி 12.4 ஓவர்களில் 124 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் உலகக் கிண்ண தொடரில் தமது முதல் வெற்றியையும் பதிவு செய்து அசத்தியது.




## தொடரிலிருந்து பரிதாபமாய் வெளியேறியது அவுஸ்திரேலியா



### சிம்பாப்வேயிடம் வாங்கிக் கட்டிய கங்காருகள்

குழு சீ இன் மிகப் பெரும் பலமிக்க அணியாக வர்ணிக்கப்பட்ட முன்னாள் சம்பியனான அவுஸ்திரேலிய அணி சிக்கந்தர் ராசா தலைமையிலான சிம்பாப்வே அணியை கடந்த 13ஆம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் எதிர்கொண்டது.
இப்போட்டியின் முதலில் துடுப்பாடிய சிம்பாப்வே அணிக்கு அதன் முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் அற்புதமான அடித்தளத்தை இட்டுக் கொடுத்தனர். இதில் பிரியன் பேனட் ஆட்டமிழக்காமல் அரைச்சதம் கடந்து 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க முசேகிவா மற்றும் ரையன் புருள் ஆகியோர் தலா 35 ஓட்டங்களை அடிக்க 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
பின்னர் சவால் மிக்க 170 ஓட்டங்களை நோக்கி பதிலளித்த அவுஸ்திரேலிய அணியால் சிம்பாப்வே அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தொடராக விக்கெட்டுக்களை பறிகொடுத்தனர். இதனால் பலமிக்க அவுஸ்திரேலிய அணியை 19.3 ஓவர்களுக்குள் 146 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து சகல விக்கெட்டுக்களையும் சுருட்டி இதுவரை யான இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது சிம்பாப்வே அணி. இதற்கு முன்னர் கடந்த 2007ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதல் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் சிம்பாப்வே அணி அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







### விளையாட மறுத்த பாகிஸ்தானை வெளுத்துக் கட்டிய இந்தியா

கிரிக்கெட் உலகமே எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு போட்டி. இப் போட்டி நடக்குமா அல்லது நடக்காதா என பல கருத்துக் கணிப்புகள் இடம்பெற்றுக் கொண்டிருக்க இப் போட்டி நடந்தாக வேண்டும் என இலங்கை ஜனாதிபதி செய்த முயற்சி வெற்றியடைய குழு ஏ இல் இடம்பெற்றுள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் கடந்த 15ஆம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இரவுப் போட்டியில் மோதிக் கொண்டன.
எல்லாப் பேச்சுவார்த்தைகளும் வெற்றி பெற்று போட்டி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருக்க, போட்டி இடம்பெறும் நாள் கொழும்பில் மழை பெய்யலாம் என எதிர்வு கூறல்கள் ஒருபுறம் வர போட்டி இடம் பெறுமா இல்லையா என்ற அடுத்த நிலை உருவானது.
இருப்பினும் கடந்த 15ஆம் திகதி மைதானத்தில் இரு நாட்டு ரசிகர்களும் சூழ மழை காணாமலே போனது.
இதனால் போட்டி குறித்த நேரத்திற்கு ஆரம்பித்திருக்க நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.




இதன்படி களம் கண்ட இந்திய அணியின் ஆரம்ப வீரரான அபிஷேக் சர்மா டக்அவுட் ஆகி ஏமாற்ற மைதானம் பாகிஸ்தான் ரசிகர்களின் ஆரவாரத்தால் அதிர்ந்து போனது. இருப்பினும் மற்றைய ஆரம்ப வீரரான இஷான் கிஷன் அதிரடி காட்டி அரைச்சதம் கடந்து மிரட்ட பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் கலங்கிப் போனார்கள்.
இதனால் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.
பின்னர் சவால் மிக்க வெற்றி இலக்கான 176 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முன்வரிசைத் துடுப்பாட வீரர்களான பர்ஹான், ஷைம் ஐயூப், சல்மான் அலி ஆகா மற்றும் பாபர் அசாம் ஆகியோர் ஒற்றை இலக்கங்களுடன் பவர் பிளே ஓவர்களுக்குள் பெவிலியன் திரும்பினர்.

தொடர் அடுத்த பக்கம்...

**(விளையாட்டு .... முன்பக்க தொடர்)**

பின்னர் உஸ்மான் கான் அதிகபட்சமாக 44 ஓட்டங்களுடன் வெளியேற பாகிஸ்தான் அணி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 61 ஓட்டங்களால் மோசமான தோல்வியை எதிர்கொண்டது.

## ஆஸியை விரட்டியடித்த இலங்கைச் சிங்கங்கள்

பலராலும் எதிர்பார்க்கப்பட்ட குழு பீ இற்கான போட்டியான இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போட்டி நேற்று (16) பல்லேகல மைதானத்தில் இரவுப் போட்டியாக இடம்பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தசுன் சானக்க முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை அவுஸ்திரேலிய அணிக்கு வழங்கினார்.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப ஜோடியான மிச்சல் மார்ஸ் மற்றும் ட்ரவீஸ் ஹெட் ஜோடி அதிரடி ஆரம்பத்தை தத்தமது அரைச் சதங்களுடன் வழங்கியது. இதனால் 11 ஓவர்களில் 110 ஓட்டங்களை கடந்தது





அவுஸ்திரேலிய அணி.

பின்னர் இவ்விருவரும் ஆட்டமிழக்க இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் அசத்த ஆரம்பித்தனர். இதனால் இறுதி 9 ஓவர்களில் அவ் அணியால் 71 ஓட்டங்களையே பெற முடியுமாகப் போக 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது அவுஸ்திரேலிய அணி.

பின்னர் 182 என்ற இமாலய வெற்றி இலக்கு நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணியின் ஆரம்ப வீரரான குசல் பெரேரா 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இருப்பினும் களத்திலிருந்த பெத்தும் நிஷங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஜோடி ஆஸிப் பந்து வீச்சாளர்களை வெளுத்து வாங்கியது.

குசல் மெண்டிஸ் அரைச்சதம் கடந்து ஆட்டமிழக்க பெத்தும் அரைச்சதம் கடந்து நிலைத்திருந்தார். பின்னர் அதிரடியை தொடர்ந்த பெத்தும் சதம் அடித்து அசத்த , வெற்றி ஓட்டத்தை பவன் ரத்நாயக்க அடிக்க இலங்கை அணி 18 ஓவர்களில் 2 விக்கெட்டுக் களை மாத்திரம் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் அசத்தல் வெற்றியைப் பதிவு செய்தது.

## சிம்பாப்வே எதிர் அயர்லாந்து ஆட்டம் மழையால் கழுவப்பட தொடரிலிருந்து வெளியேறியது அவுஸ்திரேலியா

நடப்பு இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் குழு நிலை போட்டிகளின் அடிப்படையில் குழுக்களில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகளே அடுத்த சுற்றான சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெறும்.

அதற்கமைய இக் குழுவில் இலங்கை அணி முதலிடம் பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாக 2ஆம் அணி அவுஸ்திரேலிய அணியை வீழ்த்திய சிம்பாப்வேயா அல்லது அவுஸ்திரேலியாவா என்ற கேள்வியிருக்க நேற்று (17) பல்லேகல மைதானத்தில் சிம்பாப்வே அணி அயர்லாந்து அணியை எதிர்கொண்டது.

இப்போட்டி மழை காரணமாகக் கழுவப்பட இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டது. அதற்கமைய சிம்பாப்வே அணி இலங்கை அணிக்கு எதிரான ஒரு போட்டி மீதமிருக்க இரு வெற்றி மற்றும் ஒரு வெற்றி தோல்வியற்ற முடிவுடன் 5 புள்ளிகளைப் பெற்று சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது. இதனால் முன்னாள் சம்பியனான அவுஸ்திரேலிய அணி தொடரிலிருந்து பரிதாபமாக வெளியேறியது.

## அடுத்தடுத்து சதங்கள் பதிவு

16ஆம் திகதி அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிஷங்க 52 பந்துகளில் சதத்தை கடந்து அசத்தியதுடன் 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் முதல் சதத்தையும் பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில் இன்று (17) கனடா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியில் முதலில் துடுப்பாடிய கனடா அணி சார்பில் 19 வயதான யுவராஜ் சம்ரா நியூஸிலாந்து பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்து தனது முதல் சதத்தை பதிவு செய்ததுடன் இந்நடப்பு உலகக் கிண்ண தொடரில் 2ஆவது சதத்தைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரைச்சதத்தில் ஹெட்ரிக் அடித்த குசல் மெண்டிஸ்

நடப்பு இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் முதல் சுற்றான குழு நிலை லீக் போட்டிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்க இலங்கை அணி இதுவரையில் 3 போட்டிகளில் பங்கேற்றுள்ளது.

இதில் இலங்கை அணி முதலில் எதிர்கொண்ட அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டி, ஓமான் அணிக்கு எதிரான போட்டி மற்றும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டி ஆகிய மூன்றிலும் அசத்தல் அரைச்சதத்தை பதிவு செய்த குசல் மெண்டிஸ் தொடராக ஹெட்ரிக் அரைச் சதங்களை அடித்து அசத்தினார்.

இதற்கு முன்னர் கடந்த இருபத்துக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் மஹேல ஜெயவர்த்தன, விராட் கோலி, பாபர் அசாம் மற்றும் கே.எல். ராகுல் ஆகியோர் இச்சாதனையை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி

முதல் குழு நிலை சுற்றுக்கள் முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெறும்.

அதற்கமைய குழு ஏ இல் இதுவரையில் தாம் சந்தித்த 3 போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி தகுதி பெற்றிருக்க மற்றைய அணி எது என்பதை உறுதிப்படுத்தும் ஆட்டமாக பாகிஸ்தான் மற்றும் நமீபியா போட்டியே முடிவு செய்ய உள்ளன.

மேலும் குழு பீ இல் இருந்து இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகள் தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளன.

மேலும் குழு சீ இல் மேற்கிந்தியத் தீவுகள் முதல் இடம் பெற்றிருக்க 2ஆவது இடத்தை இங்கிலாந்து அணி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைகின்றன. மேலும் குழு டீ இல் தென்னாபிரிக்க மற்றும் நியூஸிலாந்து அணிகள் தம் சுப்பர் 8 சுற்றுக்கான வருகையை உறுதிப்படுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.






## சுப்பர் 8 இன் குழுக்கள்

சுப்பர் 8 சுற்றில் தெரிவாகும் 8 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு அணிக்கு 3 போட்டிகள் வீதம் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குழு 1 இல் இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் சிம்பாப்வே அணிகள் இடம்பெறலாம்.

அதேபோல் குழு 2 இல் இலங்கை , இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் நாளைய போட்டியில் வெற்றி பெற்றால் பாகிஸ்தான் அணி இடம்பெறலாம்.

## சுப்பர் 8 சுற்றுப் போட்டிகள்

நடப்பு இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் சுப்பர் 8 சுற்றின் முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பு ஆர் பிரேமதாச மைதானத்தில் இரவுப் போட்டியாக நியூசிலாந்து அணிக்கும் (பாகிஸ்தான்) அணிக்கும் இடையில் இடம்பெறும்.

இலங்கை அணி சுப்பர் 8 சுற்றின் முதல் போட்டியில் 22ஆம் திகதி பல்லேகல சர்வதேச மைதானத்தில் வைத்து இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.